# செம்மணி

நிலம் 3 துகள் 115 வள்ளுவர் ஆண்டு 2052, 01 - 07 ஐப்பசி 2022 வாரமலர் பக்கங்கள் 23


# மருத்துவப் புறக்கணிப்புக்காக அரசு ரூ. 3 கோடி இழப்பீடு வழங்க தீர்ப்பு

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பு

மருத்துவப் புறக்கணிப்புக் காரணமாகப் பாதிக்கப்பட்ட குழந்தை ஒன்றின் எதிர் காலத்திற்காக அதன் குடும்பத்தினருக்கு இலங்கை அரசு 2 கோடி ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இலங்கையின் சட்ட வரலாற்றில் மருத்துவப் புறக்கணிப்புக்காக இழப்பீடு வழங்கப்படுவது குறித்த மிக மிக முக்கியமான தீர்ப்பு இது என்கிறார்கள் சட்ட வல்லுநர்கள். களணி, பியகமவைச் சேர்ந்த குழந்தையின் தாயார் தாக்கல் செய்த மனுவைத் தீர விசாரித்த பின்னர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கி

பக்கம் 03



# பெற்றோல் விலை ரூ 40 குறைப்பு

இலங்கையில் பெற்றோல் விலை சனிக்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது. 92 ஒக்டேன் பெற்றோலின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 410 ரூபா. 95 ஒக்டேன் பெற்றோலின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 510 ரூபா. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டதைத் தொடர்ந்து எரிபொருட்களின் விலைகள் கடுமையாக எகிறின. அத்தோடு அவற்றுக்குக் கடுமையான தட்

பக்கம் 03



# உயர் பாதுகாப்பு வலயங்கள் கொழும்பில் நீக்கப்பட்டன

கொழும்பில் அறிவிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிவிப்பை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க சனிக்கிழமை விடுத்தால். போர்க் கால உயர் பாதுகாப்பு வலயங்களை மீண்டும் அறிவித்தது தொடர்பில் எழுந்த கடும் எதிர்ப்புக்களை அடுத்து தனது முன்னைய அரசிதழ் அறிவிப்பைப் புதிய அறிவிப்பின் ஊடாகத் திரும்பப் பெற்றுள்ளார் அரச தலைவர்.

முன்னாள்அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவியைவிட்டு ஓடுவதற்குக் காரணமான மக்கள் போராட்டங்கள் இடம்பெற்ற பகுதிகள் உட்பட கொழும்பின் முக்கிய பகுதிகள் பலவற்றையும் உயர் பாதுகாப்பு வலயங்களாக புரட்டாதி (செப்டெம்பர்) 23ஆம் நாள் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். போராட்டக்காரர்கள் மீண்டும் போராட்டங்களைத் தொடங்கப் போகிறார்கள் என்று செய்திகள் அடிபடும் நிலையில் இந்தப் உயர் பாதுகாப்பு வலய அறிவிப்பு விடுக்கப்பட்டது போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்துவதற்காகவே

பக்கம் 03

# சமூக பாதுகாப்பு வரி நடைமுறைக்கு வந்தது

சமூகப் பாதுகாப்புக்கான பங்களிப்பு என்கிற புதிய வரி ஐப்பசி (ஒக்டோபர்) முதலாம் நாள் சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த மாத தொடக்கத்தில் இந்தப் புதிய வரிக்கான சட்டம் நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. 81 மேலதிக வாக்குகளால் அது சட்டமாக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின் பிரதியில் கடந்த வாரம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேயவர்த்தன கையெழுத்திட்டதன் மூலம் அது சட்ட மதிப்பைப் பெற்றது.

கடுமையான நெருக்கடியைச் சந்தித்துள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பு

பக்கம் 03

# பெரும்போக தேவைக்கான உரத்தை வாங்க நடவடிக்கை

நாட்டின் பெரும்போக நெற் செய்கைக்குத் தேவையான போதியளவு உரத்தைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விரைவிலேயே இந்த உரம் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார் என்று அரச தலைவர் செயலகத்தின் அறிக்கை கூறுகின்றது.

பெரும் போகத்துக்கான உரம் தொடர்பில்

பக்கம் 03


செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# ரணிலிடமும் காணப்படும் தடுமாற்றம் நல்லதல்ல

அரச தலைவராக பெற்றுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் காணப்படும் தடுமாற்றம் நாட்டுக்கு நல்லதல்ல. நெருக்கடியான நேரங்களில் ஒரு உறுதியான, கொள்கைப் பிடிப்புள்ள, பிரச்சினைகளை நேர் நின்று எதிர்கொள்ளக்கூடிய தலைவராலேயே அதிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்க முடியும். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்காலச் செயற்பாடுகள் அவர் அத்தகையதொரு தலைவரல்லர் என்று எடுத்துக்காட்டுகின்றது.
உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான அரசிதழ் அறிவிப்பு தற்போது அரச தலைவரால் மீளப்பெறப்பட்டுள்ளது. எதிர்க் கட்சிகள், பொது அமைப்புக்களின் கண்டனம் மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் கடுமையான எதிர்ப்பு ஆகியவற்றின் விளைவாகவே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.
தனக்கு எதிரான போராட்டங்கள் எதிவரும் நாள்களில் வலுப்படக்கூடும் என்கிற அச்சம் காரணமாகவே கொழும்பின் முக்கிய இடங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவித்தார் அரச தலைவர். போராட்டங்கள் தொடர்பான உளவுத் தகவல்களின் அடிப்படையில் மீண்டும் ஒரு பதவிக் கவிழ்ப்பு நிகழ்ந்துவிடாமல் சுதாகரித்துக்கொள்ளும் தன்மை அரச தலைவரின் நடவடிக்கைகளில் தெரிகின்றது.
எப்போது எனது பதவி பறிபோகுமோ என்கிற அச்சத்துடனேயே ஒரு தலைவர் ஆட்சியில் தொடர்வதென்பது நாட்டில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்திவிடும். முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்ற நிலையில் அவரிடமும் இத்தகைய தடுமாற்றத்தைப் பார்க்க முடிந்தது. இரசாயன உரம் மீதான தடைகளை அகற்றுதல் உள்ளிட்ட தடுமாற்றமான முடிவுகளை அவர் தொடர்ந்து எடுத்து வந்தார். அதன் விளைவு போராட்டங்கள் மேலும் உச்சம் பெற்றன பொருளாதாரச் சிக்கல்கள் மேலும் வலுப்பெற்று நாடு சீரழிந்தது.
இப்போது ரணில் விக்கிரமசிங்கவும் அதேபோன்று தடுமாறத் தொடங்கியிருப்பது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்குப் பதில் மேலும் படுகுழியில் தள்ளிவிடும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது. ஒருபுறத்தில் தனது பதவியைத் தக்கவைப்பது, அதற்காக ராஜபக்சக்களுக்கும் பொது ஜன பெரமுனவுக்கும் விரோதமில்லாமல் நடந்துகொள்வது மறுபுறத்தில் நாட்டை மீட்டெடுப்பதற்கு வேண்டிய உறுதியான நடவடிக்கைகளை எடுப்பது ஆகிய இரு விடயங்களுக்கும் மத்தியில் சிக்கிக்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க முடிவுகளை எடுப்பதில் தடுமாறுவது நல்லதல்ல. அரச தலைவர் இப்படித் தடுமாறுவது பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் மீதும் கடும் பாதிப்பைக் கொண்டுவரும். முதலீடுகளோ, உதவிகளோ கிடைக்காமல் போகும் அல்லது காலதாமதமாகும்.
இப்போதிருக்கும் நிலையில் நாட்டினதும் நாட்டு மக்களதும் நலன் கருதியே ஒரு தலைவர் அனைத்து முடிவுகளையும் எடுக்க வேண்டும்; எடுக்க முடியும். அரசியல்வாதிகள் எல்லோருக்கும் தத்தம் சுய அரசியல் மற்றும் கட்சி அரசியலும் முக்கியம்தான். ஆனால் அவற்றை முதன்மைப்படுத்தும் நேரம் இதுவல்ல. பொருளாதார இடரிலிருந்தும் இனப்பிரச்சினையிலிருந்தும் நாட்டை மீட்டெடுப்பதன் மூலமே நாட்டினதும் மக்களதும் எதிர்காலத்தை உறுதியாகக் கட்டியெழுப்ப முடியும். அதற்கு உறுதியான முடிவுகளை எடுக்கக்கூடிய தலைவரும் சூழலும் அவசியம். இவற்றைக் கருத்தில்கொண்டு ரணில் விக்கிரமசிங்க மக்கள் நலன் நோக்கிய முடிவுகளை நோக்கிச் செல்லவேண்டும் அல்லது நாட்டை சிறப்பாக வழிநடத்தக்கூடிய தலைவர் ஒருவருக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொள்ளவேண்டும்.

# செய்யாத குற்றத்துக்காக 13 வருடங்கள் சிறையில் வாடிய அப்பாவி மனிதன்



15 வயதுச் சிறுமி ஒருத்தியை வன்புணர்ந்த பின்னர் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் தவறாகக் கைது செய்யப்பட்டவர் என்பது 13 வருடங்களுக்குப் பின்னர் கண்டறியப்பட்டுள்ளது. உண்மையான குற்றவாளி கண்டறியப்பட்டதை அடுத்துச் தவறான சந்தேகநபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.
இரண்டு பிள்ளைகளின் தந்தையான 39 வயது அப்பாவி மனிதர் கால்நடைகளை மேய்ப்பவராகக் கூலி வேலை செய்து வந்தவர். 2009ஆம் ஆண்டு எகலியகொடவில் நடந்த சிறுமி கொலை தொடர்பான சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.
பாடசாலைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சிறுமியைக் கடத்தி, வன்புணர்ந்து- பின்னர் தலையில் தாக்கிக் கொலைசெய்தார் என்று அவர் மீது காவல் துறையினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். கொல்லப்பட்ட சிறுமி வீசப்பட்டிருந்த மலைப் பகுதியில் கிடைத்த தடயங்களில் இருந்து நடத்தப்பட்ட மரபணுப் பரிசோதனைகளில் சந்தேகநபரின் தொடர்பு நிரூபிக்கப்பட்டதால் அவரை நீதிமன்றம் விளக்கமறியதில் வைத்தது.
பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது என்றாலும் அவரைப் பிணையெடுக்க யாரும் இல்லாத காரணத்தில் அவர் தொடர்ந்தும் சிறையிலேயே வாடி வந்தார்.
அண்மையில் அதே எகலியகொடவில் 90 வயது மூதாட்டி ஒருவரும் படுகொலைசெய்யப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரே தற்போது மாணவி கொலை தொடர்பான விவரங்களையும் வெளியிட்டுள்ளார். மூதாட்டி கொலையில் கைது செய்யப்பட்டவரான பிரேமசிறி சேனநாயக்க சிறையில் சிறுமி கொலைச் சந்தேகநபரைச் சந்தித்த பின்னர் தானே சிறுமியை வன்புணர்ந்து கொலை செய்தார் என்கிற உண்மையை காவல்துறையினரிடம் ஒப்புக்கொண்டார்.
விசாரணைகள் சாட்சியங்களின் பின்னர் முன்னைய சந்தேகநபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## மருத்துவப்...

யுள்ளது.
கம்பகா மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் புறக்கணிப்புக் காரணமாகவே தனது குழந்தை சிறப்புத் தேவையுள்ள குழந்தையாகப் பிறந்தது என்று அதனது தாயார் நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டியிருந்தார்.
2012ஆம் ஆண்டு மகப்பேறுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தனக்கு கடுமையான இடுப்பு வலி ஏற்படுவதாக மருத்துவர்களிடமும் தாதியர் மற்றும் பணியாளர்களிடமும் முறையிட்டபோதும் அது பற்றி அவர்கள் அலட்டிக்கொள்ளவில்லை என்றும் தயாரின் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
தனக்கு பொறுக்கமுடியாத வலி ஏற்பட்டதாகத் தெரிவித்ததை மருத்துவர்களும் ஏனையவர்களும் புறக்கணித்ததன் காரணத்தாலேயே தனது குழந்தை சிறப்புத் தேவையுடைய குழந்தையாகப் பிறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.
தீர விசாரித்த பின்னர் பாதிக்கப்பட்ட குழந்தையின் எதிர் காலத்தைக் கருத்தில்கொண்டு, அவரது மருத்துவம் மற்றும் சிறப்புத் தேவைகளுக்காக அரசு 3 கோடி ரூபாவை இழப்பீடாக வழங்கவேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

---

## உயர்...

என்று பரவலான கண்டனங்கள் எழுந்தன.
உயர் பாதுகாப்பு வலயங்களை அறிவிப்பதற்கு அரச தலைவர் பயன்படுத்தியிருக்கும் சட்டப் பிரிவுக ளின்படி அவர் அதனைச் செய்ய முடியாது என்று இலங்கைச் சட்டவாளர்கள் சங்கமும் (பார் அஸோசி யேசன்) சுட்டிக் காட்டியிருந்தது. இது ஒரு சட்ட விரோத நடவடிக்கை என்று சங்கம் கண்டித்தது.
எதிர்ப்புக்கள் அதிகரித்ததை அடுத்து உயர் பாது காப்பு வலயங்கள் தொடர்பான தனது அறிவிப்பை அரச தலைவர் திரும்பப் பெறுவார் என்றும் தனது ஜப்பான், பிலிப் பைன்ஸ் நாடுகளுக்கான பயணத்தை முடித்துத் திரும் பியதும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங் கள் கடந்த வாரமே தகவல் வெளியிட்டிருந்தன.
உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகச் சட்ட மா அதிபருடன் கலந்துரையாடியதன் பின்னர் அரச தலைவர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார் என்றும் அந்த வட் டாரங்கள் தெரிவித்திருந்தன.
உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான அறிவித்தல் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளின் மீதும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டதும் அது நீக்கப்பட்டதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று என்று தெரிவிக்கப்படுகின்றது.

---

## பெற்றோல்...

டுப்பாடும் ஏற்பட்டது. கியூ.ஆர். முறைமை கொண்டுவரப் பட்டதை அடுத்து பெற்றோல், டீசல் தட்டுப்பாடு நீங் கியது. எனினும் பன்னாட்டுச் சந்தையில் மசகு எண்ணெய் யின் விலை குறைந்தபோதும் இலங்கையில் அதன் விலை குறையவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டு வந்தது.
இந்த நிலையில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் மீண்டும் முனைப்புப் பெறும் நிலை தோற்றம் பெற்றுவருகின்றது. அத்தகைய பின்னணியில் பெற்றோல் விலை குறைக்கப்பட்டுள்ளது. டீசலின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

---

## சமூக...

வதற்காகவும் அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் இந்த சமூகப் பாதுகாப்பு வரி அறிமுகப்படுத்தப் படுவதாக 2022 நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது.
இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங் குநர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோர் மத்தியில் வருடத்திற்கு 12 கோடி ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டுபவர்களுக்கு இந்த வரி 2.5 வீதம் விதிக்கப்படும்.
இந்த வரியின் மூலம் வருடாந்தம் 140 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

---

## பெரும்போக...


அரச தலைவர் செயலகத்தில் வியாழக்கிழமை நடந்த கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார் என்று அந்தச் செய்திக் குறிப்புக் கூறுகின்றது.
பெரும்போகக் காலத்திற்குத் தேவையான இயற்கை மற்றும் செயற்கை உரங்களின் அளவு தொடர்பிலேயே இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# அரசியல்வாதிகளின் திருகுதாளத்தை புட்டுப் புட்டு வைத்த பிக்கு தலையைக் குனிந்திருந்து கேட்ட ரணில்

இலங்கையின் பௌத்த வரலாற்று நூலான மகா வம்சத்தில் கி.மு 307-267 வரையான காலப்பகுதியில் அநுராதபுரத்தைத் தேவநம்பியதீசன் என்ற மன்னன் ஆண்டான் என்றும் அவனை மிகிந்தலையில் சந்தித்த அசோகனின் மகனான மகிந்த தேரர் பௌத்த மதத்தைப் பரப்பினார் என்றும் மகிந்த தேரரின் சகோதரியான சங்கமித்தை புனித வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டு வந்து அனுராதபுரத்தில் நாட்டினார் என்றெல்லாம் குறிப் புகள் உள்ளன. இலங்கையின் தற்போதைய தலைமை அமைச்சரான தினேஷ்குண வர்த்தனவையும் அவரது பரிவாரங்களையும் மிகிந் தலை புத்த கோவிலில் இருத்தி வைத்து இலங்கையின் இன்றைய நிலை பற்றிய தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் மிகிந்தலை விகாராதிபதி.

அங்கு விகாராதிபதி கூறியதைத் தலைமை அமைச்சர் அமைதியாகக் கேட்கவேண்டியிருந்தது. பிக்கு காட்டமாகப் பேசிக் கொண்டதைத் தலைமை அமைச்சர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

கமலநாதன்



### விகாரதிபதியின் ஆதங்கம்

எல்லா வளங்களும் உள்ள இந்த நாட்டில் மக்கள் இன்று அனுபவிக்கும் அவலம் எப்படி ஏற்பட்டது...? ஆட்சியாளர்கள் தமக்கு வேண்டியவாறு ஆட்சி நடத்தியதாலும், உயர் நிலையிலுள்ள அரசியல்வாதிகள் எல்லோரும் களவு எடுத்ததாலும் வந்த விளைவே இது. ஒவ்வொரு அரசியல்வாதிகளும் ஆயிரம் ஆண்டுகளுக்குத் தமது குடும்பம் வாழக்கூடிய சொத்துகளைச் சேகரிப்பதில் கவனம் செலுத்துகிறார்களே தவிர நாட்டு மக்களைப் பற்றி யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும் என்பதே பௌத்த பீடங்களின் எதிர்பார்ப்பாகும். அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் அடங்கலாக அனைத்துப் பௌத்த அமைப்புகளும் இணைந்து ஆட்சியாளர்களுக்கு அறிக்கை ஒன்றை ஏற்கனவே சமர்ப்பித்திருக்கிறோம். அதில் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து 6 மாத காலங்களுக்கான இடைக்கால அரசு ஒன்றை அமைக்குமாறும் அதன் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துமாறும் பரிந்துரை செய்திருக்கிறோம்.

### முழு நாடும் அவலத்தில்

அரசுக்கு எதிராகப் போராட்டம் செய்தவர்களைத் தாக்கியது, அலரி மாளிகைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தாக்கியது, பல கோடி ரூபா சொத்துகளுக்கு அழிவை ஏற்படுத்தி யது என எல்லாமே மிக மோசமான நிகழ்வுகளே. அரசியல் வாதிகளின் வீடுகளில் யூறியாப் பசளைப் பைகள்,

எரிவாயுச் சிலிண் டர்கள் என மக்களுக்குக் கிடைக்காத பொருள்கள் பதுக்கி வைக் கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

**பொருளாதார மத்திய நிலையம் அனுராதபுரத்தில்**

அனுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோண மலை, ஏனைய பகுதிகளை எல்லாம் இலகு வில் இணைக்கக்கூடிய பகுதி வட மத்திய மாகாணம் ஆகும். அனுராதபுரத்திலே பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப் படவேண்டும். தம்புள்ளைக்கு மரக்கறிகளை ஏற்றிப் பின்னர் ஏனைய இடங்களுக்குக் கொண்டுசெல்வதற்குக் கால தாமதமும் அதிக செலவும் ஏற்படுகிறது. இதுபற்றி எதிர் காலத்திலாவது சிந்தியுங்கள். அரசியல் வாதிகள் நினைப்பதுபோல தமக்கு ஏற்றவாறு எல்லாவற்றையும் செய்ய முடியாது.

**தமிழருக்குப் பதவி கொடுத்தால் ஏன் குமுறுகிறீர்கள்**

45 ஆண்டுகாலமாக எல்லாளன் என்ற தமிழ் மன்னன் அனுராதபுரத்தை ஆண்ட வரலாறு இலங்கைக்கு உண்டு. தற்போது தமிழர் ஒருவருக்கு முக்கிய பதவி ஒன்றை வழங்கினால் சிங்களவர் ஏன் கொதித்து எழ வேண்டும். திறமையானவர்கள் முக்கிய பதவியில் இருப் பது நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்குமல்லவா...?

**60 வயதில் ஓய்வு**

60 வயதில் ஓய்வு பெறுவது கட்டாயமானது. அண்மையில் இலங்கைக் கிரிக்கெட், வலைப்பந்தாட்ட அணிகள் உயர் சாதனைகள் புரிந்தது பற்றி அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டிப் பேசினார். அதை இளைஞர்களால் மாத்திரமே சாதிக்க முடிந்தது. அதே போலவே நாங்களும் கூறுகிறோம் அரசியலில் இளைஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று. கொரியாவில் ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவர் மட்டுமே அரசியலில் ஈடுபட முடியும் அந்த நிலை இலங்கையிலும் கொண்டுவரப்படவேண்டும். அதன் மூலமாக மட்டுமே உயர் பதவிகளில் இருப்பவர்களின் களவுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

**50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதும்**

இலங்கை ஒரு சிறிய நாடு. 25 மாவட்டங்களே உள் ளன. ஒரு மாவட்டத்துக்கு 2 உறுப்பினர்கள் என்ற அடிப் படையில் தெரிவு செய்தால் 50 நாடாளுமன்ற உறுப் பினர்கள் போதுமானவர்கள். மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்களை வைத்து நாட்டை இலகுவாக நிர்வகிக்க முடியும்

**மக்களின் வறுமை**

அரசியல்வாதிகள் எல்லா வருமான வழிகளையும் தாங்களே வைத்திருப்பதால் சாதாரண மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர். ஒரு சீமெந்துப் பை 3 ஆயிரத்து 200 ரூபாவாக விற்கப்படுவதால் சாதாரண மக்கள் சீமெந்து, மணல், சல்லி ஆகியவற்றைக் கிலோக் கணக் கில் வாங்கித் தமது வேலைகளைச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம், வர்த்தகம், ஏனைய வருமான வழிகள் என எல்லாவற்றையும் அரசியல்வாதி கள் மேற்கொள்வதால் மக்கள் எந்தத் தொழிலையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

## அரசியல்வாதிகள் எல்லா வருமான வழிகளையும் தாங்களே வைத்திருப்பதால் சாதாரண மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர்.

**சிங்கப்பூர்போல ஆக்கவேண்டாம்**

இலங்கையைச் சிங்கப்பூர்போல ஆக்கிக் காட்டுவேன் என அரசியல்வாதிகள்விடும் கதை இனித் தேவை யில்லை. இலங்கையை இலங்கைபோல வைத்திருந்தாலே போதும். அதற்கு அரசியல்வாதிகள் கொள்ளைக்காரர் களாக இல்லாதிருந்தாலே போதுமானது. நாங்கள் எமது நாடான இலங்கையைப் பற்றிப்பேசினால் போதும்.

**புலிகளின் காலத்தில் இந்தக் கஸ்ரமில்லை**

முன்பு கிராம சேவகர்கள் நிறைவேற்றிய பணிகளை இன்று பலர் சேர்ந்து பல லட்ச ரூபாக்களைச் செல வளித்துச் செய்யவேண்டியிருக்கிறது. புலிகள், ஜே.வி பியினர் போராட்டம் நடத்திய காலத்தில் கூட மக்கள் தற்போது இருப்பதுபோல கஸ்ரங்களை அனுபவிக்க வில்லை. போர் இல்லாத நிலையில் அரசியல்வாதிகளின் திருட்டுகளால் மக்கள் துன்பப்படவேண்டியுள்ளது.


**சமுர்த்திக் கொடுப்பனவுகள் யாருக்கு**

சமுர்த்திக் கொடுப்பனவுகள் ஏழை மக்களுக்கோ, பாதிக்கப்பட்டவர்களுக்கோ கிடைக்கவில்லை. அரசியல் வாதிகள் தெரிவு செய்பவர்களுக்கே வழங்கப்படுகின்றன. இந்தத் தெரிவுகளைப் பாரபட்சமின்றிக் கிராம அலுவ லர்களே தெரிவு செய்யமுடியும். தற்போதுள்ள நிர்வா கத்தால் அதைச் செய்ய முடியாது.

**நாடாளுமன்ற விடயம்**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் போயிருந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்புபவர்களாகவே உள்ளனர். அரச நிறுவனங்களும் அவ்வாறே இருக்கின் றன. அரச போக்குவரத்து, மருத்துவமனைகள், வங்கி கள் ஆகியவற்றுக்கும் தனியார் சேவைகளுக்குமுள்ள வேறுபாட்டைப் பாருங்கள். களவு, முறைகேடான நிர் வாகம் ஆகியவற்றால் அரச நிறுவனங்கள் பின்னடை வான நிலையில் உள்ளன. இதற்கு அரசியல்வாதிகளே காரணம்.

இவ்வாறாகப் பல விடயங்களை மிகிந்தலைப் பிரதம பிக்கு காட்டமாகவும் விநயமாகவும் கூறினார். தலைமை அமைச்சர் தலைமையிலான குழுவினர் அதைக் கேட்டுக்கொண்டு இருந்தனர். மறுத்துக்கூற அவர்களிடம் எதுவும் இருக்கவில்லை. அதற்கு அவர்கள் முற்படவும் இல்லை. ஏனெனில் அவர் சொன்னதில் பொய் எதுவு மில்லை.




தர்மராசா

# அரசியல் கைதிகளைப் பற்றிய பிரபாகரனின் பேச்சு

**09.04.2002** அன்று அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கத்துக்கு வருகின்றனர் என்றும், ஏ9 வீPதி திறக்கப்பட இருக்கிறது என்றும், **10.04.2002**அன்று பிரபாகரனின் ஊடகவியலாளர் சந்திப்பும், பத்திரிகையார் மாநாடும் நடக்கவிருக்கிறது என்றும் செய்திகள் வெளியாகின. எனவே அந்தக் காலப்பகுதியில் சிறைகளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கும் ஆதலால் **5**ஆம் மாதத்துக்குப் பின்பே உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று கைதிகளால் முடிவெடுக்கப்பட்டது.

கைதிகளுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் நிலவுகையில் உணவு தவிர்ப்புப் போராட்டமானது தொடங்கப்பட்டால் பெருந்தொகைக் கைதிகள் சிறைச்சாலை உணவை எடுப்பார்கள். அதனால் உணவு தவிர்ப்புப் போராட்டம் பிசகிப் போய்விடும். இவ்வாறான விசப் பரீட்சையில் ஒரு சில கைதிகள் இறங்குவதன் மூலம் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டால் திருப்திதான். ஆனால், அவ்வாறான நிலை எட்டாத பட்சத்தில் ஒரு சிலரின் உயிர் பறிபோவதில் அர்த்தமில்லை.

நாட்டில் அமைதிச் சூழல் ஒன்று முகிழ் விட்டிருக்கும் நிலையில் கொஞ்ச நாள்கள் பொறுத்திருப்பதால் எந்தப் பின்னடைவும் வரப்போவதில்லை. அப்போதைய சூழலில் சிறைச்சாலைகளில் கைதிகள் மீதான அச்சுறுத்தல்களும், நெருக்கடிகளும் பெருமளவுக்குத் தளர்வதை அவதானிக்க முடிந்தது. நீண்ட கால நன்மைக்காக ஒரு காலைப் பின் வைப்பதால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படப்போவதில்லை. எல்லாவற்றையும்விட டி, பி ஆகிய வார்ட்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கிடையில் போட்டித் தன்மை காணப்பட்டமையும், எல்லாக் கைதிகளுடனும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதிலும் சிக்கல் இருந்தது. இவ்விரு வாட்டிலுள்ளவர்களையும் இணைத்துச் செயற்படத்தக்க ஒரு தலைமைத்துவம் களுத்துறைச் சிறைக் கைதிகள் மத்தியில் அப்போது இல்லாதிருந்தது துரதிர்ஸ்டமே.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஆவண செய்யும்படி அப்போதைய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் அப்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருக்கிறார் என்று **9.4.2002** அன்றைய தினகரன் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. எல்லாம் இனிய செய்திகளாக இருப்பினும் நடைமுறைக்கு வரக் கால தாமதம் ஆகலாம் அல்லது சாத்தியமில்லாமல் போய்விடலாம் என்று விளங்கியது.

# கருணா உ தடவைகள் தப்பினார்

**கமலநாதன்**

(கடந்த வாரத் தொடர்ச்சி)

டபிள்யு ஏ பிறேமதிலக என்பவர் இலங்கைச் சிறப்புப் படைப் பிரிவின் மோட்டார் சைக்கிள் படையணியில் 1986இல் இணைந்தவர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புலிகளுடன் பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டார். அவர் தனது அனுபவங்களை வெனச யூரியூப் தளத்தில் கீழ்வருமாறு பகிர்ந்தார். அதன் முதல் பாகம் கடந்த வாரம் வெளியாகி இருந்தது. இந்த வாரம் இரண்டாம் வெளியாகின்றது.

மணலாற்றில் ஹென் பார்ம், டொலர் பாம் பகுதிகளில் தாக்குதல் நடந்தது. புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். இந்தத் தாக்குதல்களில் 17 கொமாண்டோக்கள் இறந்தனர். 24 புலிகள் இறந்தனர். புலி ஒருவர் கால்களில் காயப்பட்ட நிலையில் இழுத்துக் கொண்டு செல்வதைக் கண்டேன். என்னிடமிருந்த எல்.என்.பி. துப்பாக்கியால் அவரைச் சுட்டுக் கொன்றேன். அங்குள்ள ஒரு பெரிய வீர மரத்தடியில் துப்பாக்கி ஒன்று சாத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தத் துப்பாக்கியை எடுக்க வேண்டாம் என்றும் அதை எடுத்தால் வெடிக்கத்தக்கதாக ஏதாவது செய்து வைத்திருப்பார்கள் என்றும் ஆகவே அந்தத் துப்பாக்கிக்குச் சுடுமாறும் எமக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் விஜயக்கோன் பணித்தார். அவ்வாறு சுட்டபோது எதுவும் நடக்கவில்லை.



கேணல் வடுகே அந்த இடத்தில் நின்று மேற்கொண்டு செய்யவேண்டிய விடயங்கள் பற்றிப் படை அதிகாரிகளுடன் கதைத்துக்கொண்டிருந்தார். அந்தப் பகுதியில் 20 படையினர் வரை நின்றார்கள். துப்பாக்கிச் சாத்தப்பட்டிருந்த அந்த வீர மரத்தின் கொப்பு ஒன்றில் இரண்டு பக்கங்களும் காலைத் தொங்கவிட்டவாறு புலி உறுப்பினர் ஒருவர் மறைந்திருப்பதைக் கண்டேன். உடனே சத்தமிட்டபடி என்னிடமிருந்த எல்.என்.பியால் அவரைச் சுட்டேன். அவர் இறந்த நிலையில்தான் ஏற்கனவே கொப்பில் சிக்கிக் கிடந்தான். அவனது கையில் கிளிப் கழற்றிய நிலையில் கைக்குண்டு ஒன்று இருந்து. அது வெடித்துச் சிதறியதால் கேணல் வடுகேக்கும் இன்னும் சிலருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

அந்தப் பகுதி சிறிய காடு. பெரிய மரங்கள் நிறைந்திருந்தன. மரத்தின் கீழ்ப் பாகத்தில் வெட்டையாக இருந்ததால் அதில் ஏறி அதிக தூரத்தைப் பார்க்க முடிந்தது. புலிகள் விசிலடித்தபடி முன்னேறி வந்தார்கள். ஒரு கொமாண்டோச் சிப்பாய் பெரிய பாலை மரம் ஒன்றில் ஏறிக் கவர் எடுத்து


10.4.2002 அன்று பிரபாகரனின் செய்தியாளர் மாநாட்டைச் சிறையில் இருந்த தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி அவரிடம் கேட்கப்பட்டது.. அவர்களை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன் - என்று அதற்குப் பிரபாகரன் பதில் அளித்தார். அவ்வாறு அவர் கூறியதும் களுத்துறைச் சிறையில் உள்ள சகல வார்ட்களிலும் கைதட்டும் ஓசை பலமாகக் கேட்டது. கைதிகள் மத்தியில் சிறைத் துன்பத்திலும் நம்பிக்கையும் உற்சாகமும் தெரிந்தது. பிரபாகரன் சக்தி மிக்க தலைவர் என்பதால் அவரது பதிலுக்கு மிகுந்த மதிப்பு இருந்தது.

10.4.2002 அன்று பி பிரிவில் 10 பேர் உணவு தவிர்ப்பை தொடங்கினர். எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுவிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. இதற்கான உத்தரவாதத்தைச் சட்டவாளர்களும் நீதி அமைச்சர்களும் நேரடியாகச் சிறைக்கு வந்து வழங்கவேண்டும் என்றனர். தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும்படி கடிதம் மூலம் பி-6 வார்ட் கைதிகளிடம் கேட்டிருந்தனர். அங்கு எவரும் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துத் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசினார் என்றும் இந்த மாத முடிவுக்குள் கைதிகளில் ஒரு பகுதியினர் விடுவிக்கப்படுவர் என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார் என்றும் 11.04.2002 அன்று சூரியன் வானொலியின் இரவு நேரச் செய்தியில் அறிவிக்கப்பட்டது.

(தொடரும்)

# அமிர்தலிங்கம் அகிம்சைவாதியா?



அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் என்ற பெயர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரின் அரசியலில் முக்கியமானது. அவர் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் அவரது 95ஆவது பிறந்த தினத்தைத் தமிழ் அரசுக் கட்சியினர் அண்மையில் நினைவுகூர்ந்தனர். தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை அவர் ஓர் அகிம்சைவதி. ஆயுதம் தாங்கியவர்கள் அவரைச் சுட்டுக்கொன்றுவிட்டார்கள் என்றே கருதி வருகிறார்கள்.

**நியூட்டன்**

உண்மையில் அமிர்தலிங்கம் அகிம்சைவாதியா என்றால், அதுதான் இல்லை. அவர் குருதித் தாகம் கொண்ட மனிதர். மேடையில் பேசத் தொடங்கும் போது தமிழ் இளைஞர்கள் தமது கைகளைச் சவர அலகால் கிழித்துக் குருதியை நெற்றித் திலகமிட்டதை வரவேற்ற ஒருவர். பாடசாலை மாணவனாக இருந்தபோது தனது கையைக் கிழித்து அமிர்தலிங்கத்துக்குப் பொட்டு வைக்கப்போய் மயங்கி விழுந்ததாலேயே புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளருக்குப் பொட்டு என்ற பெயர் நிலைத்தது.

இதைவிட அகிம்சைவாதியைத் தளபதி என்கிறார்கள். அகிம்சைவாதியானால் தளபதி என்ற பெயர் பொருத்தமற்றது. தளபதி என்பது போர்க்களத்தில் சண்டையை வழிநடத்துபவரைக் குறிக்கும். தனது பெயரின் அடைமொழியாகத் தளபதியைச் சேர்த்திருக்கின்ற அமிர்தலிங்கத்தை அகிம்சைவாதி என்பது பொருத்தமற்றது. தனது அடிமனதிலுள்ள போர்த்தனத்தை இளைஞர்களுக்குக் காட்டுவதற்காக நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் இருந்த சங்கிலியனின் வாளை எடுத்து வீசிக் காட்டியவர் அமிர்தலிங்கம். இத்தகைய நபரை அகிம்சைவாதிப் பட்டியலுக்குள் வைத்திருப்பதை முரணான விடயமாகவே கௌளமுடியும். அமிழர்தலிங்கம் அகிம்சைவாதி அல்ல என்பதை விளங்கிக் கொள்ள இவை போதுமானவை.

தமிழர் மத்தியில் தன்னை ஒரு தளபதியாகவும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இந்தியாவுக்கும் தன்னை ஓர் அகிம்சைவதி

நின்றார். அதே பாலை மரத்தின் மறுபக்கத்தில் புலிகள் கவர் எடுப்பதைக் கண்டேன். அவ்வாறு அவர்கள் நிற்பதைத் தொலைத் தொடர்புக் கருவி மூலம் குறிப்பிட்ட சிப்பாய்க்கு அறிவித்தேன். உடனே அவர் புலிகளுக்குச் சுடத் தொடங்கினார்.

**பொலன்னறுவைப் பகுதித் தாக்குதல்**

பொலன்னறுவையிலுள்ள தம்மின்ன, அரல, தங்வில பகுதிக் கிராமங்களுக்குள் புலிகள் புகுந்து கிராம வாசிகளை வெட்டிக் கொன்றனர். அதற்கு எதிரான நடவடிக்கை ஒன்றுக்காக அந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்தோம். அந்த நடவடிக்கைக்குக் கேணல் லாபீர், கேணல் ஜெயபெர்ணாண்டோ ஆகியோர் பொறுப்பாக இருந்தனர். 7 நாள்கள் அங்கு தாக்குதல்கள் நடந்தன. அவற்றின்போது புலிகளின் பல சிறிய முகாம்களைத் தேடி அழித்தோம். இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளின்போது சிப்பாய் ஒருவர் மலைப் பகுதி ஒன்றிலிருந்து புலிகளின் நடமாட்டத்தை அவதானித்துத் தொலைத் தொடர்புக் கருவி மூலம் அறிவித்துக்கொண்டிருந்தார்.

வாய்க்கால் ஒன்றினூடாகப் புலிகள் சிலர் நடந்து வருவதைக் கண்டேன். உடனே எனது உதவியாளரை உசார்ப்படுத்தி எனது எல்.என்.பி ரக துப்பாக்கியாலும் உதவியாளரின் சாதாரண துப்பாக்கியாலும் அனைவரையும் சுட்டு வீழ்த்தினோம். அந்த அணியில் 8 புலிகள் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து எடுத்த ஆயுதங்களை உலங்கு வானூர்தியில் ஏற்றி அனுப்பினோம்.

**கருணா இரண்டு தடவைகள் தப்பினார்**

எமது மோட்டார் சைக்கிள் படையணியின் தாக்குதல்களில் இருந்து இலகுவில் யாரும் தப்பிவிட முடியாது. ஆனால் இரண்டு தடவைகள் கருணாவைக் கொல்ல நாம் எடுத்த முயற்சிகள் தோல்வியைத் தந்தன. முதல் தடவையாகக் கிரானில் கருணாவின் மருமகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்குக் கருணா வந்திருக்கிறார் என்று அறிந்து அந்தப் பகுதியை இலக்கு வைத்தோம். அதன்போது அவர் தப்பிவிட்டார். பின்னர் ஒரு தடவை கிரான் படை முகாமுக்கு அருகில் கருணா நிற்கிறார் என்று தகவல் கிடைத்தது. அப்போது எம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தோற்றுப்போனது.

மோட்டார் சைக்கிள் படையணியில் இருந்த நான் பல முக்கிய தாக்குதல்களை மேற்கொண்டதால் என்னைப் புலிகள் இலக்கு வைத்திருந்தார்கள். ரத்மலானை வானூர்தி நிலைய வீதியில் வைத்து என்னைக் கடத்துவதற்கு முயற்சிகள் எடுத்தனர். எனினும் நான் அதில் தப்பிவிட்டேன். எனது அணியைச் சேர்ந்த ஒருவர் ரத்மலானைப் பகுதியில் வைத்துக் கொல்லப்பட்டார்.

13

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன்மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல் வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இந்தவாரச் சொல்

## "இறுக்கு"

இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச் சொல்லாகவே அதி கம் பயன்படுத்தப்படுகிறது. அத்தோடு பெயர்ச் சொல்லாகவும் புழக்கத்தில் உள்ளது.

"மாட்டின் கழுத்துக் கயிற்றை இறுக்கு", "அவர் பிறகும் கதைக்க வந்தார். நான் காதைப் பொத்தி இறுக்கிவிட்டன்", "காலையில் புட்டை இறுக்கிவிட்டால் மத்தியனம் வரை பசிக்காது", "அவர் சுத்தப் பாத்தவர் சட்டத்தால இறுக்கிப்போட்டாங்கள்", "கழுத்திலை சீலை இறுக்கித்தான் புள்ளை செத்தது", "மண்போட்டு இறுக்கிவிட்டால் குளக்கட்டில் கசிவு இருக்காது", "வைக்கல் கயிற்றைச் சுண்டி இறுக்கினால்தான் வண்டில் ஓடேக்குள்ள வழுகாது", "நெற் கயிறை இறுக்கிக் கட்டு", "வாளிக் கயிற்றை இறுக்கிவிடு", "பாதுகாப்பை நல்லா இறுக்கிப்போட்டாங்கள்" "போத்தில் மூடியை ஒழுக்கில்லாமல் இறுக்கிப்பூட்டு" என்று பல அர்த்தங்கள் வெளிப்படுமாறு பல சந்தர்ப்பங்களில் வினைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

"உழைப்புப் பிழைப்பு இல்லாமல் கடும் இறுக்கமா இருக்கு", "அவள் காசைக் கைவிடாள்... ஆள் கடும் இறுக்கம்", "வரியை இறுக்கினதால லாபம் குறைவு", "அரசியல் கடும் இறுக்கமாய்த்தான் இருக்கு" என்றெல்லாம் பெயர்ச் சொல்லாகவும் பல அர்த்தங்களைத் தாங்கியபடி புழக்கத்திலுள்ளது.

யாகவும் காட்ட முயன்றார். அமிர்தலிங்கம். காலி முகத்திடலில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டபோது சிங்களக் காவல்துறையினரால் தாக்கப்பட்டார். அகிம்சை வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட தன் மீது சிங்களக் குண்டர்கள் தாக்கிவிட்டனர் என்று காட்டுவதற்காகக் குருதிக் காயங்களுடன் நாடாளுமன்றத்துக்குச் சென்று உரையாற்றினார். அது சுதந்திரன் போன்ற தமிழ் அரசுக் கட்சி ஆதரவு ஊடகங்களில் அதிகமாக ஊதிப் பெருப்பிக்கப்பட்டது. அது ஒன்று மாத்திரமே அவர் அகிம்சாவாதி என்று பேசப்படக் காரணமாக இருக்கிறது.

போதாக்குறைக்குத் தனது ஜனநாயக அரசியல் வலுவிழந்து போன நிலையில் தனது மகனின் தலைமையில் ஆயுத அமைப்பை உருவாக்க முயன்றவர் அமிர்தலிங்கம். அந்த ஆயுதக் குழு பின்னர் கலைந்துபோனது. தனது மேடைப் பேச்சுகளில் இந்தியப் போராட்டக்காரரான பகத்சிங் போல தமிழ் இளைஞர்கள் தியாகம் செய்ய முன்வரவேண்டும் என அமிர்தலிங்கம் அறைகூவல் விடுப்பது வழக்கம். அவர் முன்னுதாரணமாகக் காட்டிய பகத்சிங்கூட அகிம்சைவாதியல்லர். அவரது முழு வாழ்க்கையும் போர், குருதி ஆயுதம் என்றேயிருந்தது. இவ்வாறு தமிழ்ச் சமூகத்துக்கு அமிர்தலிங்கம் ஊட்டிய குருதியும் ஆயுதமும் அவருக்கு எதிராகத் திரும்பியபோது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அமிர்தலிங்கம் அகிம்சைவாதியல்லர் என்பதை எடுத்துக் காட்ட அவரது வாழ்க்கையில் இவ்வாறு பல சம்பவங்கள் உள்ளன.

நட்சத்திரா

# ஏன்...?

# அப்படி...?

34



## ரயர்கள் ஏன் கறுப்பாக இருக்கின்றன....?

இறப்பர் பாலோ வெள்ளை நிறம். அந்த இறப்பர் பாலில் இருந்து தயாரிக்கின்ற பொருள்களுக்குப் பல்வேறு நிறங்களைச் சேர்த்து அழகுபடுத்துகிறார்கள். இறப்பர் பாலுடன் நிறங்களைக் கலந்து அழகு பொருந்தப் பொருள்களைச் செய்கிறார்கள். இதனால் பல்வேறு நிறங்களில் இறப்பர் பால் மாற்றம் பெற்றுப் பாவனைப் பொருள்களாக மனிதர்களின் கைகளில் தவழ்கிறது. இவ்வாறே வெள்ளை நிற இறப்பர் பாலைக் கறுப்பாக்கி வட்டகைகள் எனப்படுகின்ற வாகன ரயர்களைத் தயாரிக்கிறார்கள். ஏன் அப்படி வெள்ளை நிறப் பாலை நிறம் மாற்றுகிறார்கள்...? அதுவும் கறுப்பாக...! வெள்ளையை விடக் கறுப்பு அழகாக இருக்கிறதா...? வெள்ளை நிற இறப்பர் பாலை அப்படியே ரயர்களுக்கு மூலப்பொருளாக்காமல் கறுப்பாக்கிக் கொள்வது ஏன்...?


இறப்பர் பால் வெள்ளையாக இருப்பது என்னவோ இயல்புதான். வட்டகைகள் எனப்படுகின்ற ரயர்களைத் தயாரிப்பதற்குரிய இறப்பர் பாலுடன் கார்பன் கறுப்பு எனப்படுகின்ற ஒரு வகைக் கனியத்தைக் கலக்கிறார்கள். கார்பன் கறுப்பைக் கலந்துதான் வட்டகைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் காபன் கறுப்பானது கருமை நிறத்தில் இருப்பதால் தான் வட்டகைகள் எல்லாமே கறுப்பாக இருக்கின்றன. இதனால் வேறு நிறங்களில் வட்டகைகளைத் தயாரிப்பதில்லை. ஏனெனில் கார்பன் கறுப்பைக் கலந்து வட்டகைகளைக் கறுப்பாக்குவதற்குப் பல தேவைகள் - காரணங்கள் இருக்கின்றன...!

எந்நேரமும் வீதிகளில் உராய்வடையும் தொழில்பாடுடைய வட்டகைகள் வேறு நிறங்களில் இருந்தால் அழுக்காகக் காட்சியளிப்பதை வெளிப்படையாகவே காணலாம். ஆனால் கறுப்பு நிறத்தைக் கொடுத்தால், வீதிகளில் கிடந்து வட்டகைகளில் ஒட்டிக்கொள்கிற எவ்வித அழுக்குகளும் இலகுவாகவோ - பளிச்சென்றோ பார்வைக்குத் தெரிவது தவிர்க்கப்படுகிறது. இதைவிட வெண்ணிற இறப்பர் பாலை நேரடியாகப் பயன்படுத்துவதை விடவும் கார்பன் கறுப்பைக் கலந்து கறுப்பாக்கிப் பயன்படுத்துவதால் வட்டகைகளின் பாவனைக் காலம் அதிகமாக இருக்கிறது. அவை தேய்வடைவது ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கிறது. இவற்றைவிட வீதி, வெயில் என்றே வட்டகைகளின் தொழிற்பாடு இருப்பதால் வெயிலில் உள்ள புறஊதாக் கதிர்களால் ஏற்படுகின்ற பாதிப்புகளையும் இந்தக் கார்பன் கறுப்புக்

கலப்புக் குறைக்கிறது. முக்கியமாக வட்டகைகளின் தேய்வனவைக் குறைத்துப் பாவனைக் காலத்தை அதிகரிக்கச் செய்வதாலேயே கார்பன் கறுப்பை வட்டகைகளுக்குப் பயன்படுத்தும் பழக்கமும் தேவையும் ஏற்பட்டது. இதையெல்லாம் விட வட்டகைகளுக்குள் இறப்பருக்கு மத்தியில் "ஸ்ரீல் பெல்ட்" எனப்படும் ஒருவித நூல் மற்றும் கப்பிக் கட்டமைப்பும் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் வீதியில் உருளும் வட்டகைகள் வெப்பமடையும் போது அந்த வெப்பமானது வட்டகையின் அனைத்துப் பகுதிக்கும் சம அளவில் பரவச் செய்வதுடன் வட்டகைகளுக்கு உறுதியையும் அளிக்கிறது. இத்தகைய காரணங்களால்தான் வட்டகைகள் கறுப்பாக இருக்கின்றன.

---

# மார்பகப் புற்றுநோய்




**கணேசன்**

கடந்த சில வாரங்களாகப் புற்றுநோயைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய்தான் முதலிடம் வகிக்கிறது. போன தலைமுறை வரை இது 50 வயதுக்குப் பிறகே வந்துகொண்டிருந்தது. இப்போது இது 30 வயதிலும் வருகிறது. இந்த எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது.

மார்பகப் புற்றுநோயைப் பொறுத்த அளவில் தொடக்கத்தில் கண்டறிந்துவிட்டால், 100% குணமாகும். இதற்கு என் அம்மாவே ஓர் உதாரணம். 1980இல் நான் மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்த போது என் அம்மாவுக்கு வயது 55. அவருக்கு அப்போது ஒரு பக்க மார்புக் காம்பில் நீர்க்கசிவு ஏற்பட்டதைச் சொன்னபோது உடனடியாக நான் படித்துக்கொண்டிருந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற ஏற்பாடு செய்தேன்.

அப்போதெல்லாம் இப்போதுள்ளபடி மேம்பட்ட பரிசோதனைகளோ, சிகிச்சைமுறைகளோ கிடையாது. நெஞ்சு எக்ஸ்-ரே, திசு ஆய்வுப் பரிசோதனை முறைகள்தான் இருந்தன. அம்மாவைப் பரிசோதித்தபோது மார்புக் காம்பில் மட்டும்தான் புற்றுநோய் இருந்தது. வேறெங்கும் அது பரவியிருக்கவில்லை. என் மருத்துவப் பேராசிரியர் மறைந்த டி.எஸ்.சுப்பிரமணியம் என் அம்மாவுக்கு அறுவை சிகிச்சை செய்து ஒரு பக்க மார்பகத்தையும் அக்குளில் இருந்த நெரிகட்டிகளையும் அகற்றிவிட்டார். அத்தோடு சரி. வேறு சிகிச்சைகள் எதுவும் தேவையில்லை எனச் சொல்லிவிட்டார். முறையான தொடர் கவனிப்பு போதும் என்றார். என் அம்மா 85 வயது வரை நலமுடன் வாழ்ந்தார்.

**தயக்கம் வேண்டாம்!**

மார்பகத்தில் ஏற்படும் சில கட்டிகள் நாட்படும்போது புற்றுநோய்க் கட்டிகளாக மாறலாம். தங்கள் வயதுக்கு ஏற்ப 'ஸ்க்ரீனிங்' எனும் நோய் முன்னறிதல் பரிசோதனைகளைச் செய்துகொள்ளும் வழக்கம் நம் நாட்டுப் பெண்களுக்கு இல்லை என்பதாலும், மார்பகத்தில் ஏற்படும் மாற்றங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதில் தயக்கம் காட்டுவதாலும் மார்பகப் புற்றுநோயைத் தொடக்கத்தில் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு இன்னும் படித்தவர்களுக்கே முழுவதுமாக இல்லை என்பதாலும் அறியாமையினாலும் பெரும்பாலும் மார்பகப் புற்றுநோய் மூன்றாம் நிலையில் இருக்கும்போதுதான் சிகிச்சைக்கே வருகின்றனர். இதனால்தான் இந்தப் புற்றுநோயை முழுவதுமாகக் குணப்படுத்துவது சிரமம் ஆகிறது.

**அறிகுறிகள் என்ன?**

பெண்களுக்கு மார்பில் கட்டி, மார்புக் காம்பில் நீர்க்கசிவு, குருதிக்கசிவு, மார்புக் காம்பு உள்வாங்குதல், அக்குளில் கட்டி, கை முழுவதும் வீங்குவது போன்ற அறிகுறிகள் ஏற்படும்போது உஷாராகிவிடவேண்டும். இவர்கள் மருத்துவ ஆலோசனைக்கும் பரிசோதனைக்கும் தயாராகிவிட வேண்டும்.

**காரணங்கள் எவை?**

மார்பகப் புற்றுநோய்க்கு இதுதான் காரணம் என்று உறுதியாக எதையும் கூறமுடியவில்லை. ஆனாலும் சில காரணிகள் இந்தப் புற்றுநோய் வருவதைத் தூண்டுகின்றன என்பது மட்டும் தெரிய வந்துள்ளது.

வயது 45 - 70. இது பொதுவானது. இப்போது 30 வயது பெண்களும் கவனமாக இருக்கவேண்டும்.

உடற்பருமன், உடற்பயிற்சி இல்லாதது.

வம்சாவளியில் மார்பகப் புற்றுநோய் அல்லது

சினைப்பைப் புற்றுநோய் வந்திருந்தால் அந்த வாரிசுகளுக்கு மார்பகத்தில் புற்றுநோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

11 வயதுக்குள் பெண்கள் பருவமடைவது.

இறுதி மாதவிலக்கு (மெனோபாஸ்) நிற்பது தாமதம் ஆவது.

பதின் பருவத்தில் ஹார்மோன் மாத்திரைகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவது.

முதல் குழந்தையை 30 வயதுக்கு மேல் பெற்றுக்கொள்வது.

குழந்தைக்குத் தாய்ப்பால் தராமல் இருப்பது.

மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்வது.

குழந்தைப்பேறு இல்லாதது.

புகைபிடிப்பது, மது அருந்துவது.

**என்ன பரிசோதனைகள் உள்ளன?**

மார்பக சுய பரிசோதனை: 20 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்ட பெண்கள் தாங்களாகவே மாதம் ஒருமுறை மார்பகங்களை அழுத்தமாகத் தொட்டுப் பரிசோதித்துக் கொள்ளலாம். மாதவிலக்கு ஏற்பட்ட 7 முதல் 10 நாள்களுக்குள், கண்ணாடி முன் நின்று, இரு மார்பகங்களுக்கு இடையே வித்தியாசம் தெரிகிறதா என்று கண்களால் பார்த்தும், நான்கு விரல்களால் அழுத்தித் தேய்த்தும் சுயபரிசோதனை செய்துகொள்ளலாம். அப்போது ஏதேனும் வலி இல்லாத கட்டி, வீக்கம், மார்புக் காம்பில் மாறுதல் போன்றவை தெரிந்தால், உடனே மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்வது அவசியம். பிரச்சினை இல்லாதபட்சத்தில் இவர்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவரிடம் நேரடியாகப் பரிசோதனை செய்துகொள்ளலாம்.

40 வயதிலிருந்து 50 வயதுக்குட்பட்ட பெண்கள் மார்பக சுய பரிசோதனையோடு வருடத்துக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை மற்றும் மெமோகிராம் பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். இவர்கள் 65 வயது வரை இதைத் தொடரலாம்.


மெமோகிராம்: எக்ஸ்-ரே எடுத்துப் பார்ப்பது போன்ற எளிய பரிசோதனைதான் இது. பெண்கள் 40 வயதுக்கு மேல் இதை மேற்கொண்டு விடுவது நல்லது. வருடத்துக்கு ஒரு முறை இது தேவைப்படும். சந்தேகம் வலுத்தால் வருடத்துக்கு இரண்டு முறைகூட அவசியப்படலாம்.

அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை: மார்பகத்தை அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்வதன் மூலம் மார்பகப் புற்றுநோயை முன்னரே அறியலாம். வயிற்றுக்குள் புற்றுநோய் பரவியுள்ளதா என்பதையும் இதில் அறியலாம்.

**மாதவிலக்கு ஏற்பட்ட 7 முதல் 10 நாள்களுக்குள், கண்ணாடி முன் நின்று, இரு மார்பகங்களுக்கு இடையே வித்தியாசம் தெரிகிறதா என்று கண்களால் பார்த்தும், நான்கு விரல்களால் அழுத்தித் தேய்த்தும் சுயபரிசோதனை செய்துகொள்ளலாம்**

குருதிப் பரிசோதனைகள்: மார்பகப் புற்றுநோயை முன்னரே அறிய BRCA1/BRCA2 குருதிப் பரிசோதனைகள் உதவுகின்றன. சில ஹார்மோன் பரிசோதனைகளும் உள்ளன.

**மார்பக எம்.ஆர்.ஐ. பரிசோதனை:** வம்சாவளியில் மார்பகத்தில் புற்றுநோய் ஏற்பட்டவர்களின் வாரிசுகளுக்கும், குருதிப் பரிசோதனைகளில் புற்றுநோய்க்கு வாய்ப்புள்ளது எனத் தெரியும் பெண்களுக்கும் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.



**திசு ஆய்வுப் பரிசோதனை**

மார்பகத்தில் ஏற்பட்டுள்ள கட்டி புற்றுநோயைச் சார்ந்ததா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் திசு ஆய்வுப் பரிசோதனை முக்கியப் பங்கு வகிக்கிறது. அதில் பல விதம் உண்டு. திசுவை ஊசிமூலம் உறிஞ்சி எடுத்துப் பரிசோதிப்பது (FNAC). அடுத்தது, 'ட்ரூகட் பயாப்சி' (True-cut biopsy). சிறு கருவி கொண்டு சிறிதளவு திசுவை மட்டும் வெட்டியெடுத்துப் பரிசோதிக்கும் முறை இது. மார்பகப் புற்றுநோயை உறுதிப்படுத்தப் பெரிதும் உதவும் வலி இல்லாத பரிசோதனை இது. இதில் சந்தேகம் வரும்போது மொத்தத் திசுவையும் அகற்றி (Total biopsy) பரிசோதிப்பதும் உண்டு.

'பெட்-சி.டி. ஸ்கேன்' பரிசோதனை

புற்றுநோய் மார்பகத்தில் மட்டுமே உள்ளதா, உடலில் வேறு எங்காவது பரவியுள்ளதா என்பதைத் துல்லியமாகத் தெரிவிக்கும் நவீன பரிசோதனை இது. தேவைப்பட்டால் மட்டுமே இது மேற்கொள்ளப்படுகிறது.

**சிகிச்சை முறைகள்**

திசு ஆய்வுப் பரிசோதனையில் மார்பகப் புற்றுநோய் வகை மற்றும் நோய்நிலையைத் தெரிந்துகொண்டு, நோயாளியின் பொது ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு புற்றுநோய் மருத்துவ சிகிச்சை மருத்துவர், புற்று நோய் அறுவை சிகிச்சை மருத்துவர், கதிர்வீச்சு மருத்துவர் ஆகிய மூவரும் கலந்தாலோசித்து சிகிச்சையை முடிவு செய்கின்றனர்.

அறுவை சிகிச்சை: மார்பகப் புற்றுநோயில் பல நிலைகள் உள்ளன. பூஜ்ய நிலை, முதல் நிலை, இரண்டாம் நிலை ஆகியவற்றுக்கு மார்பகத்தை அகற்ற வேண்டிய அவசியமில்லை. கட்டியை மட்டும் அகற்றினால்போதும். மற்ற நிலைகளுக்குத்தான் முழு மார்பகத்தையும் அகற்றவேண்டும். ஆனால், இரண்டிலுமே அக்குளில் உள்ள நெரிகட்டிகள் அகற்றப்படும். சிலருக்கு மருந்து சிகிச்சை கொடுத்து கட்டியின் அளவைச் சுருங்க வைத்த பிறகு அறுவை சிகிச்சை செய்யப்படுவதும் உண்டு. தேவைப்படுபவர்க

# கலக்குக் கலக்கும் கஞ்சா...!



ரவீந்திரன்

கஞ்சா மற்றும் அதுபோன்ற போதைப் பொருள்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் கடுமையாக அதிகரித்திருக்கிறது. கிராமங்கள் தோறும் கஞ்சாக் கடத்துவோர், விற்பனை செய்வோர், பயன்படுத்துவோர் எனப் பலதரப்பட்டவர்கள் அதிகரித்திருக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் தொடங்கிப் பாடசாலையிலிருந்து இடைவிலகிய - விலக்கப்பட்ட மாணவப் பருவத்தினர் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் இளைஞர்கள், அடாவடித் தனங்களில் ஈடுபடும் வாள்வெட்டுக் குழுக்கள் போன்றவற்றில் மும்முரம் காட்டுவோர், குழுவாகச் செயற்படும் பழக்கமுள்ள ஆண் மக்கள் எனப் பலதரப்பட்டவர்கள் வழியாகவும் சமூகத்தில் கஞ்சா உட்படப் பல போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்திருக்கிறது.

**காவல்துறையினரும் படையினருமோ பொறுப்பு**

யாழ்ப்பாணத்தில் புழக்கத்திலுள்ள எந்தவொரு போதைப் பொருள்களும் வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுபவையல்ல. எங்கிருந்தோ சட்டபூர்வமற்ற வகையில் கொண்டுவரப்படுகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கூடாகவும் இரகசியமாகக் கடத்தப்படுகின்றன. அதன் பின் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே இந்தச் சட்டவிரோத வருகையைத் தடுக்கவேண்டிய முதல் பொறுப்பாளிகள் நாட்டின் காவல்துறையினரும் கடற்படையினருமே ஆவர். அதற்கடுத்து அவற்றை விற்பதற்காக பல்வேறு பகுதிகளிலும் முளைத்துள்ள இரகசிய விற்பனை முகவர்களைத் தேடியறிந்து கைது செய்யவேண்டும். பின்னர் நுகர்வோர் குறைவர். இந்த வியாபாரத்தை மேற்கொள்பவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதால் இலகுவாக அதிக பணம் சம்பாதிக்கும் ஒரு மார்க்கமாக இதைக் கையிலெடுக்கின்றனர். ஒரு கிலோ ஹெரோய்ன் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியாகவுள்ளது. அவற்றை இலகுவாக எடுத்துச் செல்லவும் முடியும்.

ளுக்கு மார்பக அறுவை சிகிச்சைக்குப் பிறகு ‘மார்பக மறுசீரமைப்பு சிகிச்சை’ செய்யப்படுவதும் உண்டு.

மருந்து சிகிச்சை: அறுவை சிகிச்சை புண் ஆறியவுடனே இதைத் தொடங்கிவிட வேண்டும். சில வகை புற்றுநோய்க்கு இது அறுவை சிகிச்சைக்கு முன்னரும் கொடுக்கப்படலாம். புற்று செல்களை அழிக்கும் திறனுள்ள கூட்டு மருந்துகள் இவை. இலக்கு சார்ந்த மருந்துகள் இப்போது உள்ளன. இவற்றை குளுக்கோஸ் அல்லது சலைனில் கலந்து குருதியில் நேரடியாகச் செலுத்துவது வழக்கம். பொதுவாக, 3 வாரங்களுக்கு ஒருமுறை என மொத்தம் 6 சுழற்சிகள் கொடுப்பார்கள்.

கதிர்வீச்சு சிகிச்சை: மார்பகப் புற்றுநோய்க்கு அறுவை சிகிச்சை மற்றும் மருந்து சிகிச்சை கொடுத்த பிறகு கதிர்வீச்சு சிகிச்சை கொடுக்கப்படுவதுதான் வழக்கம். விதிவிலக்காக, சிலருக்கு அறுவை சிகிச்சைக்கு முன்னரோ மருந்து சிகிச்சைக்கு முன்னரோ இதைத் தரலாம். பொதுவாக, நாள் ஒன்றுக்கு ஒருமுறை வீதம் வாரத்துக்கு 5 நாட்களுக்கு என 25 நாட்களுக்குக் கதிர்வீச்சு சிகிச்சை கொடுக்கப்படுவது வழக்கம். மருந்து சிகிச்சை முடிந்த 2 வாரங்கள் கழித்து இது தரப்படும்.

ஹார்மோன் சிகிச்சை: குருதியில் ஹார்மோன் பரிசோதனை முடிவைப் பொறுத்து இது மேற்கொள்ளப்படுகிறது. இது மாத்திரை மற்றும் ஊசிகள் மூலம் கொடுக்கப்படும் சிகிச்சை. மார்பகப் புற்றுநோய்க்கு 5 வருடங்கள் தொடர்ந்து இது கொடுக்கப்பட வேண்டும்.

ஒருமுறை மார்பகப் புற்றுநோய் வந்தவருக்கு மறுபடியும் புற்றுநோய் வந்தால் அது மார்பகத்தில்தான் வரும் என்று சொல்ல முடியாது. வேறு எங்காவது வரலாம். ஆகவே, உடலில் எங்காவது தொடர்ந்து வலியோ, சிரமமோ இருந்தால் உடனே பரிசோதித்துக்கொள்வது நல்லது.

மார்பகப் புற்றுநோய்க்குத் தரப்படும் சிகிச்சைகள் வெற்றி பெறுவதற்கு நோயாளியின் முழுமையான ஒத்துழைப்பும் மன உறுதியும் முக்கியம். பின் கவனிப்பும் (Follow up) தொடர் கவனிப்பும் அதி முக்கியம். குறைந்தது 5 வருடங்களுக்காவது மருத்துவர் கூறும் பரிசோதனைகளைச் செய்துகொண்டால், மார்பகப் புற்றுநோய் மறுபடியும் வராமல் தடுத்துக்கொள்ள முடியும்.



# முருங்கைக் காய் ஊறுகாய்...!



தேசி - எலுமிச்சை ஊறுகாய் என்பதே நம்மவர்களுக்கு அதிக பரீட்சயமுள்ள தொடுகறி. இதென்ன முருங்கைக் காய் ஊறுகாய்...? முருங்கைக் காயில் கறி சமைக்கலாம்..., முருங்கை இலையில் வறை வறுக்கலாம்... முருங்கைக் காயில் ஊறுகாய் செய்யலாமா...? என்ற கேள்வியுடன் உங்கள் புருவங்கள் வியப்பில் உயர்வது தெரிகிறது. ஆம்...! முருங்கைக் காயில் ஊறுகாய் தயாரிக்கலாம். அது எப்படி என்று இந்த வாரம் பார்ப்போம்.

### தேவையான பொருள்கள்

முருங்கைக் காய் - அரைக் கிலோ, புளி - 125 கிராம், மிளகாய்த் தூள் - 100 கிராம், தேங்காய் எண்ணெய் 200 மில்லி, உள்ளி - 40 கிராம், வெந்தயத் தூள், மஞ்சள் தூள் ஆகியன தலா அரைத் தேக்கரண்டி. உப்பு - தேவையான அளவு. கடுகு - ஒரு தேக்கரண்டி, சீரகம் - அரைத் தேக்கரண்டி. செத்தல் மிளகாய்கள் - 2. கறிவேப்பிலை - சிறிதளவு.




### எப்படித் தயாரிப்பது...?

முதலில் முருங்கைக் காயைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கித் தோல் சீவிக் கொள்ளுங்கள். கிட்டத்தட்ட ஓர் அங்குல அளவில் நறுக்கிக் கொள்வது நன்று. புளியைக் கரைத்துப் பாணிப் பதத்தில் வைத்திருங்கள். உள்ளியைச் சொர சொரப்பாக அரைத்தெடுங்கள். தாச்சி ஒன்றில் எண்ணெய்யைவிட்டு அது சூடாகியதும் முருங்கைக் காயை வதக்குங்கள். நிறம் மாறிவரும்போது முருங்கைக் காயை எடுத்துப் பாத்திரம் ஒன்றில் வைத்திருங்கள். முருங்கைக்காயைத் தாளித்த அதே எண்ணெய்க்குள் கடுகு, சீரகம், செத்தல் மிளகாய்கள், கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டுத் தாளித்துக்கொள்ளுங்கள்.

பெரிய பாத்திரம் ஒன்றுக்குள் தாளித்த முருங்கைக் காய் மற்றும் புளிக் கரைசல், மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், உள்ளிக் கலவை, வெந்தயத் தூள், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்கவும். தாளித்து வைத்திருக்கின்ற பொருள்களையும் இதனுடன் சேர்த்து நன்கு கலக்கவும். பின்னர் சுத்தமான காற்றுப் புகாத டப்பாவுக்குள் போட்டு 3 தொடக்கம் 4 நாள்கள் வரை மூடி வையுங்கள். பின்னர் ருசியுங்கள். ருசி மிகுந்த இந்த முருங்கைக் காய் ஊறுகாய் சத்து மிகுந்ததும்கூட.

### அரசியல்வாதிகள், சட்டத்தரணிகளின் ஆதரவு

அரசியல்வாதிகளின் பலம், காவல்துறையினரின் பாதுகாப்பு, சட்டத்தரணிகளின் உதவி எனப் பல்வேறு விடயங்கள் இந்தப் போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபடுபவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 2009க்குப் பின்பான காலத்திலே இந்தப் போதைப் பொருள் வியாபாரம் தலைதூக்கியது. இவற்றைக் கடத்துவோரைக் காவல்துறையினர், படையினர், கடற்படையினர், சிறப்பு அதிரடிப்படையினர் எனப் பலரும் சில சந்தர்ப்பங்களில் கைது செய்கிறபோதிலும், அந்தச் சிலரைக்கூடச் சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் எனத் தலையிட்டு சட்டத்தின் பிடியலிருந்து காப்பாற்றுகின்றனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களுக்கு பின்னர் என்ன நடக்கின்றது என்பதுகூடச் சிலவேளைகளில் தெரியாமல்போகின்றது.

இவ்வாறானவர்களைச் சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவதில் தமிழ்ச் சட்டத்தரணிகளே அதிகம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றனர். தற்போதுள்ள அவல நிலைக்கு இந்தச் சட்டத்தரணிகளும் முக்கிய காரணமாகும்.

ஒரு குறிப்பிட்ட குற்றவாளியை ஒரே சட்டத்தரணி பல தடவைகள் காப்பாற்றியதை நீதிமன்றப் பதிவுகள் மூலம் உறுதிப்படுத்த முடியும். இதைவிடப் போதைப் பொருள்களைக் கடத்துவோர், விற்பவர்களைச் சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காக அதிக பணம் சட்டத்தரணிகளால் பெறப்படுகிறது. இதை வைத்தே சட்டத்தரணிகள் தமது செல்வத்தை அதிகமாக்கியுள்ளனர். இவ்வாறான போதைப் பொருள் வழக்குகளால் பெருந்தொகைப் பணத்தை உழைக்கும் இவர்கள் அரசியலில் தம்மைத் தமிழ்த் தேசியவாதிகளாகவும் காட்டிக் கொள்கின்றனர்.

### திலீபனின் நினைவு நாளில் சபதம்

திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவு தினத்தைக் கடைப்பிடித்துவரும் இந்த நேரத்தில் வடக்கில் போதைப் பொருள் பாவனை அபரிமிதமாக அதிகரித்திருக்கிறது என்று செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. 35 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது அதன் வாழ்வியலில் பெரியளவான மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதையும் இளைஞர்களின் மனநிலை, செயற்பாடுகள் எந்தளவுக்கு மாறியிருக்கின்றன என்பதையும் பார்க்க முடிகிறது. இந்தச் சீரழிவுகளுக்கு எல்லாம் சிங்கள ஆட்சியாளர்களையும், பாதுகாப்புத் தரப்பினரையும், சட்டத்தின் குறைபாடுகளையும் மாத்திரம் காரணமாகக் காட்டிப் பலர் தப்பி விடுகின்றனர். உண்மையில் தமிழ்ச் சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் இந்தச் சந்தேகநபர்களின் விடயத்தில் தலையிடாது விட்டாலேயே இந்த நிலையைக் கட்டுப்படுத்த முடியும். திலீபனின் நினைவு நாளைத் தமது அரசியலுக்காக நினைவு கூரத் துடிக்கும் தமிழ்ச் சட்டத்தரணிகள் இனிமேல் போதை கடத்துபவர்களையோ விற்பனை செய்பவர்களையோ நாம் நீதிமன்றில் வாதடிக் காப்பாற்ற மாட்டோம் என்றாவது சபதம் எடுக்கவேண்டும்.

# பாலாடை
# பலே ஆடை...!



பொன்னி

உணவு, உடை, உறைவிடம் ஆகியனவே மனிதர்களின் அத்தியாவசியத் தேவைகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. இதில் நடுவில் இடம்பிடிப்பது ஆடை. பூமியிலுள்ள எந்தவொரு உயிரினத்துக்கும் இல்லாத தனிச்சிறப்பு மனிதர்களுக்கு உண்டென்றால் அது அவர்கள் ஆடை அணிவதுதான். மனிதர்கள் தவிர வேறெந்த உயிர்களும் இங்கு ஆடை அணிவதில்லை. இதனால்தான் ஆடைகளில் பற் பல வகைகளை மனிதர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். தொடக்கத்தில் உடலை மறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்;ட ஆடைகள் பின்னர் உடலின் சில பகுதிகளை மாத்திரம் மறைக்கும் நிலைக்கு மாறின. அந்தரங்கப் பகுதிகளை மறைக்கும் நிலையே நீடிக்கிறது. அந்தரங்கப் பகுதிகள் குறிப்பிட்டளவில் வெளித்தெரியும் விதத்திலும் ஆடை அணியும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதை ஆபாச ஆடை என்றும் ஆபாசத்தைத் தூண்டும் விதாமான ஆடைகள் என்றும் சொல்கிறார்கள். இதைவிட ஆடை வடிவமைப்பில் கொடி கட்டிப் பறக்கிறார்கள். நாகரீகம் என்ற வளர்ச்சி நிலையைக் காரணம் காட்டிக் காலத்துக்குக் காலம் ஆடைகளில் மாற்றங்களைப் புகுத்துகிறார்கள். இவ்வாறாக ஆடை என்பது மனிதர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக இருக்கிறது. மாத்திரமன்றி மனிதர்களின் உடலோடு எந்நேரமும் ஒட்டியிருப்பதும்கூட அதுதான். இதனால் ஆடைகுறித்த கரிசனை முக்கியப்பட்டதாக இருக்கிறது.

**உடலோடு ஒட்டியிருக்கும் செயற்கை**

பட்டு, கம்பளி, பருத்தி என இயற்கை மூலம் பெறப்படும் மூலப்பொருள்களைக் கொண்டிருந்தாலும் அணியத் தயாராகும்போது ஆடையுடன் செயற்கையான மூலகங்கள் பல கலக்கப்பட்டுவிடுகின்றன. இவற்றைவிட நைலோன், பொலிஷ்ரர் போன்ற செயற்கை மூலத் துணிகளும் பாவனைக்கு விடப்பட்டிருக்கின்றன. இதனால் மனிதர்களின் உடலோடு எந்நேரமும் ஒட்டிக்கொண்டிருக்கின்ற இந்த ஆடைகளால் உடலுக்குப் பல பாதகங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. பக்க விளைவுகள் உண்டாகவும் வழிகளுள்ளன. இதனால் தைத்த மற்றும் உடுதுணிகள் அணிவது குறித்து அதிக அக்கறை காட்ட வேண்டிய கடப்பாடு மனிதர்களுக்கு உண்டு. இதையெல்லாம்விட உலகில் சுற்றுச் சூழலுக்கு அதிக அளவில் ஆபத்துகளை விளைவித்துக் கொண்டிருக்கும் துறையாக ஆயத்த ஆடைகள் உள்ளன என்பது திடுக்கிட வைக்கும் விடயமாக இருக்கிறது. நிலமை இவ்வாறிருக்கையில் மேற்குறிப்பிட்ட செயற்கைக் கலப்புகளைத் தவிர்த்து முற்றிலும் இயற்கை முறையில், இயற்கையிலிருந்து ஆடைகளைத் தயாரிக்கும் முயற்சிகளும் உலகில் ஆங்காங்கே எடுக்கப்பட்டு வருகின்றன. அவை குறித்த பரிசோதனைகள் பல நடந்து வருகின்றன.

**பால், வாழை மரம் ஆகியவற்றிலிருந்து ஆடை**

துணி நெய்து கொள்வதற்குத் தேவையான நூலைப் பசுப் பாலில் இருந்து பெறும் முயற்சி பலனளித்திருக்கிறது. பசுப்பாலில் இருந்து நூல் பெற்றுத் துணி நெய்து மனிதர்கள் அணியக்கூடிய விதத்தில் ஆடைகளை வடிவமைத்து வெற்றி கண்டுள்ளனர். அமெரிக்காவிலும், ஜேர்மன், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இந்தப் பாலாடை உற்பத்தி முயற்சி வெற்றியளித்துள்ளது. பாலிலுள்ள கேசீன் (CASEIN) என்கிற பொருளே இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. பல்வேறு பதப்படுத்தல் முறைகளின் பின்னர் பாலில் இருந்து நூல் பெறப்பட்டுத் துணியாக்கப்படுகிறது. பால் பருத்தித் துணி என்றும் இதை அழைக்கிறார்கள். பாலில் இருந்து பெறப்பட்ட கேசீனைப் பவுடராக்கிப் பின்னர் நூலாக்கித் துணி தயாரிக்கிறார்கள். இதில் ஒரு கிலோ நூலைத் தயாரிப்பதற்கு 35 லீற்றர் அளவில் பால் தேவைப்படுவதுதான் சிக்கலாக இருக்கிறது.

இதைவிட வாழை மரத்தின் பட்டைப் பகுதியியைப் பல்வேறு செயற்முறையூடாக மாற்றியமைத்து நூல்போலாக்கி அதைத் துணியாக்குவதிலும் வெற்றி கண்டுள்ளனர். இதனால் பாலிலும், வாழை மரத்திலும் இருந்து இயற்கைமுறையில் ஆடைகள் தயாரிக்கும் முயற்சி வெற்றியளித்திருக்கிறது. இந்த ஆடைகளால் சூழலுக்கோ, உடலுக்கோ எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என்றும் சொல்லப்படுகிறது. இதைவிட மியன்மார், வியட்நாம் ஆகிய நாடுகளில் தாமரைத் தண்டுகளில் இருந்து துணி நெய்கிறார்கள். இவையெல்லாம் ஆடைத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சியாகக் கொண்டாடப்படுகின்றன. நாமும் வருங்காலத்தில் பாலாடைகளை அணியும் வாய்ப்புக்குரியவர்களாக இருக்கலாம்...!

# திலீபனின்
# 5 அம்சக் கோரிக்கைகள்...!

தியாக தீபம், அறவழிப் போராட்டத்தின் உச்சம் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் ஈழப் போராட்ட மகான் திலீபன். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதியன்று இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் அடக்குமுறைகளுக்கு எதிராக 5அம்சக் கோரிக்கைகளை முன் வைத்துச் சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார். செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதியான சனிக்கிழமையன்று முற்பகல் 10.48 மணியளவில் அவரது கோரிக்கைகளுக்கு அரசுகள் எவையும் செவி சாய்க்காத நிலையில் அவர் சாவடைந்தார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான போராளிகள் பல்வேறு அமைப்புகளில் இணைந்து இறந்திருக்கிறார்கள். மக்களும் இறந்திருக்கின்றனர். இந்த இறப்புகளுக்கு மத்தியில் வலிந்து தனது உயிரைப்போக்கியவர் திலீபன். அவரது விடாப்பிடியான அந்தப் 12 நாள் போராட்டமும் அதன் பின்பான அவரது சாவும் வெகுமக்கள் எழுச்சியாகப் பரிணமித்தது. அவரது போராட்டத்துக்குக் காரணமான 5 கோரிக்கைகளைப் பற்றி இன்றைய சந்ததியிலும், அவருடைய காலந்தொட்டு வாழும் சந்ததியினரிலும் தெரியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். இப்போது வரையில் திலீபனின் அந்த 5அம்சக் கோரிக்கைகளுக்கு என்ன நடந்தது....?



**கோரிக்கை 1** - மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக்

குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

திலீபன் சார்ந்த அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு 2009இல் அழிக்கப்படும்வரை இந்த விடயம் பேணப்பட்டது அல்லது தடுத்து நிறுத்தப்பட்டது. அதன் பின்னரான காலப்பகுதியில் மறுவாழ்வு அளித்தல் என்ற பெயரில்லாமல் பல்வேறு வழிகளில் வெளிப்படையாகவும் திட்டமிட்டும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குருந்தூர் மலையில் எந்தக் கட்டுமாணமும் செய்யக்கூடாது என்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டபோதிலும் மிகப் பிரமாண்டமான தாதுகோபுரம் அமைக்கப்பட்டுவருகிறது. இந்தக் கோபுரம் முடிவடைந்ததும் அதன் அருகாமையில் சிங்கள மக்கள் குடியேறுவது மிகச் சாதாரணமாக நடந்துவிடும். தமிழ் அரசியல் வாதிகளால் முன்னெடுக்கப்படும் நீதிமன்ற நடவடிக்கைகளோ, ஆர்ப்பாட்டங்களோ சிங்களக் குடியேற்றங்களின் போக்கில் எதையும் செய்துவிடப்போவதில்லை.

**கோரிக்கை 2 - சிறைக் கூடங்களிலும் படை மற்றும் காவல்துறை தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடு தலை செய்யப்படவேண்டும்.**

தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்குள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதையும், அவர்களது குடும்பங்கள் சொல்லொணாத் துயரங்களுடன் அவர்களின் விடுதலைக்காகப் பல்வேறு இடங்களுக்கு அலைவதையும், காணமுடிகிறது. அவர்கள் தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கோருவதும் இன்று வரை தொடர்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசின் ஆட்சியில்கூட அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. புலிகள் அமைப்புச் செயலிழந்து 13 வருடங்கள் ஆகிவிட்ட பின்பும் அந்த அமைப்பிலிருந்து செயற்பட்டவர்கள் என்று அரசியல் கைதிகள் இப்போதும் தண்டிக்கப்பட்ட நிலையில் சிறைகளில் வாடுகின்றனர். இது விடயத்தில் பல வீரப்பேச்சுகளைக் கட்டவிழ்த்து விடுகின்ற தமிழ் அரசியல்வாதிகளான சட்டத்தரணிகளால்கூட ஒரு கைதியையும் விடுவிக்க முடியவில்லை.

**கோரிக்கை 3 - அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்**

ஜே.வி.பி. போராட்டத்தைத் தொடர்ந்து புலிகளை அழிப்பதற்காகவும், ஒடுக்குவதற்காகவும் பயங்கரவாதத் தடைச்சட்டம் உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டது. அப்பாவிப் பொதுமக்களையும் பலியெடுத்தது. ஆனால் அதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் விமர்சனங்கள் எழுந்தாலும் நாடாளுமன்ற வாக்கெடுப்பின்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளைவிட அதிக வாக்குகளைப் பெற்று அந்தச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையிலுள்ளது. இறுதியாக 120 எவாக்குகளை அது பெற்று நடைமுறையிலுள்ளது. சிறுபான்மையினரை ஒடுக்கும் இத்தகைய சட்டத்தைத் தொடர்ந்துபேணுவதில் சிங்களவர்கள் முன்னிற்கினார்கள். சிறுபான்மையினரால் இதை நீக்கும் அரசியல் அணுகுமுறை எதுவும் இன்றுவரையில் சாத்தியப்படவில்லை.

**கோரிக்கை 4 - ஊர்காவல் படையினருக்கு வழங்கப் பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.**

முஸ்லிம் ஊர்காவல் படைகள் என்ற பெயரில் தமிழருக்கு எதிராகச் செயற்பட்டவர்களை நிறுத்துவதே இதன் முதன்மை விடயமாக இருந்தது.

இவ்வாறான முஸ்லிம் காவல் படையினர் சிங்களப் படையினருடன் இணைந்து 2009 வரை மிகச் சிறப்பாகச் செயற்பட்டுத் தமிழருக்கு எதிரான பல்வேறு ஒடுக்குமுறைகளைச் செய்து நில ஆக்கிரமிப்பு, படை மயமாக்கல் எனப் பல விடயங்களில் பங்காற்றினர். இதைவிடச் சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் எல்லைப்புறக் கிராமங்களில் பல குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் ஊர்காவல் படை என்ற பெயரில் இணைக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. திலீபன் நினைத்தற்கு மாறாக அவர் சார்ந்த அமைப்பினரே தற்போது ஊர்காவற் படையில் இணைந்து செயற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் போரால் பாதிக்கப்பட்ட அவர்களைக் கவனிக்காமல் தமிழ்த் தலைமைகள் தமது அரசியல் வாழ்க்கையிலேயே குறியாக இருந்தமையே ஆகும்.



**கோரிக்கை 5 - தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.**

இதுகூட 2009 வரை புலிகள் இயங்கு நிலையில் இருக்கும்வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னரான காலத்தில் காவல் நிலையங்களும், நீதிமன்றங்களும் அதிகம் திறக்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் ஒவ்வொரு வருடமும் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படுகின்றன. இதில் திலீபனின் கோரிக்கைக்குச் சார்பாகத் தமிழர்கள் யாரும் எதிர் நடவடிக்கையில் இறங்கத் தயாரில்லை. எழுச்சி ஊர்வலங்களின்போது தம்மைத் தடுக்கின்ற காவல்துறையினரைப் பேசி அதைச் சமூக வலைத்தளங்களில் பரவவிடுவது மட்டுமே தமக்கு இருக்கும் நாடாளுமன்றச் சிறப்புரிமைகளைப் பயன்படுத்தித்

78

# எமையறிதல்

**ஐயங்கொண்டான் சுவாமிகள்**

நாம் வலிந்து மாற்றவிளைவது அழிப்பேதான். அது ஆசைவயப்பட்டது. ஆசையைத் திருப்திப்படுத்தவென முயலப்படுவது. திருப்தியென்கிற ஒன்றை அடைவது மட்டுமல்ல அண்மிப்பதே கடினமானது என்பதே யதார்த்த மாயுள்ளது. அலைவுறு மனம் பற்றி விரிவாகவே பேசியிருக்கிறோம். நினைவிலிருக்கும் என நம்புகிறேன். அது ஒன்றிலிருந்து இன்னொன்றாகிறது. ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுகிறது. அப்படியிருக்கும் ஒன்றுக்கு திருப்தி என்பது பற்றி என்ன புரிதலிருக்கப்போகிறது?

மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பது ஒரு காலங்குறித்து வரையறைக்குள் செய்துவிட முடியாததொன்று என்பதைக் கவனத்தில்கொள்வது அவசியமானது. வலிந்து ஏற்படுத்தப்பட்ட மாற்றமென்பது அனேகமாக நீண்டகால விளைவுகளை ஆரோக்கியமானதாகக் கொண்டிருக்குமா என்பதும் கவனத்திலெடுக்கப்படவேண்டியதே. நீண்ட நோக்கில் ஆரோக்கியமாக இருக்காது விட்டாலும் பாதக விளைவுகளைத் தராமலாவது இருக்குமா? என்பதைக் குறித்துக் கவனமெடுத்தல் அவசியமானதே. அப்படியாக யோசிக்க முடிகிறதா?



தன்னியல்பாக எழுகிற மாற்றங்கள் பற்றி நாம் இசைந்து போகவேண்டியவர்கள். அம்மாற்றங்களை உன்னிப்பாக அவதானிப்பதாலும் பட்டறிவினாலும் அதனைச் சாத்தியப்படுத்தலாம். வேள்விகள் பிராயச்சித்தங்கள் பரிகாரங்கள் கொண்டு எதுவுமே ஆகாது. தாவரங்கள் ஐந்தறிவு உயிரிகள் எல்லாம் தம்மை அவ்வாறுதான் தக்கவைக்கின்றனவா? இல்லையே, பருவ மாற்றங்களோடும் அதனாலெழும் காலநிலை மாற்றங்களோடும் தம்மை இசைவாக்குகின்றனவே? அதனால்தான் மகிழ்வோடிருக்கின்றனவா?

நாம் எமது ஆசைகளால் உருவாக்கப்பட்ட வசதி கருதி வலிந்து மாற்றங்களைச் செய்யவிளைந்ததன் விளைவாகவே நாம் துன்பங்களைச் சந்திக்கிறோம். இங்கே துன்பம் என்பதுகூட நாமாக உருவகித்ததும் உருவாக்கியதுமே என்பது குறிப்பிட்டேயாக வேண்டியது. நாம் மாற்றுகிறோம் என்று செய்பவற்றில் அனேகமானவை கவனம் தப்பிய செயல்களாகவே அமைந்துவிடுகின்றன என்பதைக் கவனிக்கத் தவறிவிடுகிறோம். இதுதான் யதார்த்தம்.

இயற்கையை மாற்ற முனைந்துபட்ட அடிகள் கொஞ்சமல்ல. அவற்றையெல்லாம் தெய்வக்குற்றம், கிரகப்பிழை, காலப்பிழை. சாபம், அது இதுவென்று காரணத்தைக் கற்பித்து அனர்த்தங்களுக்கான மூலகாரணர் நாமல்ல என்று தப்பித்துக்கொள்ளவே முயல்கிறோம். பரிகாரமென்கிற போர்வையில் சீர்குலைவென்று (ஒரு ஒழுங்கில்) இருந்ததையும் சிதைக்கிறோம். பின்னர் 'கடவுளும்

---

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்யும் செயற்பாடாக உள்ளது. தவிர காவல் நிலையங்களை அமைக்கவிடாது தடுக்க அவர்களால் முடிவதில்லை. இந்த ஆண்டும் திலீபனின் நினைவேந்தல் வடக்;கில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு மக்களைச் சிந்திக்க வைத்திருக்கின்றன. அடாவடித் தனங்கள் காணொலிக் காட்சிகளாக வெளிவந்ததால் மக்களுக்கு அதுபற்றிய மேலதிக விளக்கம் எதுவும் தேவைப்படப்போவதில்லை. திலீபனின் சாவைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியலுக்குப் பயன்படுத்த முனைந்தவர்களும் நன்கு பயன்படுத்துகிறார்கள். இந்திய அரசுக்கு எதிராப் போராடித் திலீபன் இறந்தமையால் இந்திய சார்பான தமிழ்த் தேசியவாதிகள் யாரும் இந்த நிIனைவேந்தலில் பங்குபற்றவில்லை. திலீபன் உணவு தவிர்ப்பை முன்னெடுத்த நாள்களில் உரிமை கோரப்படாத ஒரு கவிதை அங்கிருந்த மக்கள் மத்தியில் அச்சிட்டு வழங்கப்பட்டது. " திலீபன் பருக மறுக்கும் ஒவ்வொரு துளி நீரும் என்றோ ஒரு நாள் சனங்களின் கோபமாக மாறும்" என்ற அர்த்தத்தில் அந்தக் கவிதை இருந்தது. சனங்களின் கோபம் எஞ்சியிருப்பதை இறுதியில் நடந்த நினைவேந்தல் உணர்த்தியிருக்கிறது.

கைவிட்டான்' என்று புலம்பியலைகி றோம். விலக்கப்பட்டதாக வைத்தி ருந்த பேய், பிசாசு, முனி, சாத்தான் அது இதுவென்று கற்பனைக்குள்ளேயே மீண்டும் உழலுகிறோம். தூக்கம் கிடைக்குமா?

நாமாக மாற்றி நாமே சிக்கலுக்குள் மாட்டுப்பட்டிருக்கிறதுக்கு எடுத்துக் காட்டாக உணவுப் பழக்கத்தை காட்ட முடியும். நாகரீகம், நேரம். அந்தஸ்த்து என எமது எமதேயான உணவை மூலப்பொருள் தொடக்கம் சாப்பாடு வரையான அத்தனையையும் மாற்றி னோம். உடல் கொள்ளாத அளவில் விஞ்ஞானம் கண்டுபிடிக்கவொண்ணா நோய்களை காவித்திரிகிறோம். அது தெய்வம் (அப்படியொருவன் இருப் பின்) செய்த குற்றமா? சாத்தான் செய்த குற்றமா? பில்லியா? சூனியமா? சூனியமேதான். எமது அறிவுச்சூனியம்.

நாம் கடவுளையோ சாத்தானையோ பில்லியையோ சூனியத்தையோ நம்பியா மாற்றுகிறோம் பார் என்று புறப்பட்டோம்.? அப்படியான கற்ப னைச் சிருஸ்டிகளை குற்றம் சுமத்து மளவிற்கு எமது அறிவு விசாலமடைய வில்லை என்பதே உண்மை. அதை ஏற்றுக்கொள்கிற பக்குவத்தையாவது எட்ட முனைகிறோமா? இல்லையே! வாழ்க்கை எப்படி மகிழ்ச்சியாக இருக்கும்? இயற்கை எம்மை மாற்றுகிறது. நாமோ இயற்கையை மாற்றுகிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். இயற்கைப் பேரிடர்களை, கொடு நோய்களை யெல்லாம் மாற்றினோமா? வென் றோமா? முன்னுணர்ந்தாவது கொள்ள முடிந்ததா?

எம்மால் முடியும் என்கிற நம்பிக் கையும் ஒரு எல்லைவரையே இருக்க வேண்டும். இதற்குத்தான் முன்கற் பிதங்களற்ற யதார்த்தமான எண்ணம் சுயமானதாக எம்மீதான சரியானதொரு மதிப்பீட்டினது அடிப்படையில் கையி ருக்கவேண்டும். நான் ஆற்றவேண்டிய அல்லது விரும்பிய ஒரு கருமத்தை ஆற்றுவதற்கான முதற் காரணியும் மூல காரணியும் நானாகவே இருக்க வேண்டும் என்பது முக்கியமானது. அவ்வாறான ஒரு எண்ணமே எனக் கான முதல் மாற்றமாக இருக்கும்.

அவ்வாறான எண்ணமானது வலி மையாக இருக்குமானால் எமக்கு வெளியேயான ஒன்றையோ பல தையோ நம்பியிருக்கத் தேவையே யில்லை. எனக்கான எச்செயலினதும் மூலகாரணியும் நானே முதற்காரணியும் நானே என்பதன் அர்த்தம் என்ன? சிந்திப்போம்.



# இதுதான் முடிவோ?

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை கோயிலடியிலை இருக்க ஒவ்வொருதராய் வந்து சேந்துகொண்டினம். கனகர், மணியத்தார், முருகேசர், தம்பர் எண்டு கடைசியாய் வல்லியம்மான். கதை பேப்பர்ச் செய்தியளிலை தொடங்கிச்சுது. 'பேப்பர்ச் செய்தியளைப் பாக்கேக்கை நாங்கள் எங்கை நிக்கிறமெண்டது விளங்குதில்லை' எண்டு தொடக்கினார் மணியத்தார்.

'ஏன்? என்னத்தை விலைதலையளையே சொல்லுறியள்?' எண்டு கேட்டார் தம்பர். 'அட.. தம்பா... உந்த இளஞ் சமூகம் சீரழிவுபடுகுது எண்டதல்லே இப்ப இஞ்சத்தையான் முழுக் கதையுமாக் கிடக்குது' எண்டு எரிச்சல்ப்பட்டார் வல்லியம்மான். 'யாழ்ப்பாணத்தாற்றை கௌரவத்துக்கு விழுகிற பெருத்த அடியல்லே உதுகள்?' எண்டு எல் லாரையும் ஒருக்காப் பாத்து நிப்பாட்டினார் முருகேசர். 'ஓஓ.. கந்த புராணக் கலாச்சாரக்காறர் எண்டு இப்ப ஆரும் சொல்லேலுமோ?' எண்டன் நான்.

'தமையன் நினைவு தப்பி தங்கச்சியாரைக் கெடுக்கிறான், போதைப் பொருள் வாங்கிறதுக்குக்கு காசுக்காண்டி பதினேழு வயதிலை விபச்சாரம் எண்டு காது கூசுகிற கதையள்ளே உதுகள்' எண்டு கனகர் பெருமூச்சு விட்டார். 'என்ரை அனுபவத்திலை கேள்வியும் படாத சீரழிவல்லே இப்ப கிடக்குது' எண்டார் வல்லியம்மான். 'அது சரி தான்... போதைப்பொருள் தடுப்புப் பிரிவு.. ஆலோசனைப் பிரிவு... அது இதுவெண்டு கனக்கப் பேர் சம்பளம் வாங்கீனமல்லே உங்கை திணைக்களங்களிலை? அவையள் என்ன செய்யினமாம் உதுகளுக்கு?' எண்டு வழக்கம் மாதிரியே வில்லண்ட விவகாரத்துக்கை இறங்கினார் முருகேசர்.

'நானும் செய்தியளைப் பாத்திட்டு உதைத்தான் யோசிக்கிறனான்' எண்டார் மணியத்தார். 'சட்டங்களிருக்கு, அதை நடைமுறைப்படுத்துகிற ஆக்களும் இருக்கினம் அதைவிட முருகேசண்ணை சொன்ன ஆக்களும் இருக்கினம்...' எண்டு கனகர் சொல்லி முடிக்கயில்லை மணியத்தார் 'அவைக்கும் மேலையான இடங்கள் இருக்கல்லே கனகு?' எண்டொரு நக்கலான சிரிப்பைச் சிரிச்சார். முருகேசர் எல்லாரையும் ஒருக்காப் பாத்து தொண்டையைச் செருமினார். ஏதாலுஞ் சொல்லு

திரைமுற்றம்

# பபூன்




நாடக கலைஞனின் வாழ்க்கையில் நாடகமாடும் எதிர்பாராத சம்பவங்களும் திருப்பங்களுமே 'பபூன்' படத்தின் கதை. காரைக்குடியில் நாடக கம்பெனி ஒன்றில் நடித்துக்கொண்டிருக்கும் குமரன் (வைபவ்) மற்றும் முத்தையா(ஆத்தங்குடி இளையராஜா) இருவரும் தாங்கள் சார்ந்திருக்கும் நாடக தொழில் நலிவடைந்து வருவதால் வெளிநாட்டுக்குச் சென்று சம்பாதிக்கலாம் என திட்டமிடுகின்றனர். ஆனால், வெளிநாடு செல்ல போதிய பணமில்லாததால் தற்காலிகமாக போதைப்பொருள் கடத்தல் மன்னன் தனபால் என்பவரிடம் லொறி ஓட்டுநராகப் பணிக்குச் சேர்கின்றனர்.

ராமநாதபுரத்திலிருந்து உப்பை ஏற்றிகொண்டு வரும் அவர்கள் லொறியில் உப்புக்கு பதிலாக போதைப்பொருள் இருப்பது கண்டறியப்பட்டு காவல்துறை அவர்களை கைது செய்கிறது. சிறையில் அடைக்க அழைத்துச் செல்லும் வழியில் குமரனும், முத்தையாவும் தப்பித்துவிட, இறுதியில் அவர்களை காவல் துறை கண்டுபிடித்ததா? யார் இந்த தனபால்? போதைப் பொருள் கும்பலிலிருந்து அவர்கள் எப்படி தப்பித்தார்கள்? - இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்லும் படம்தான் 'பபூன்'.

காரைக்குடி வாழ் குமரனாக வைபவ். தனக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைக்குள் சிக்கி, அதிலிருந்து வெளியேற போராடும் இளைஞனின் உருவாக திரையில் தோன்றுகிறார். வழக்கமான தனது நடிப்பை பதிய வைக்க

வாரெண்டு பாக்க பேசாமலுக்கே இருந்திட்டார்.

'பெற்றாரும் கவனிக்கிறேல்லை எண்டல்லே சொல்லுகினம்?' எண்டு தம்பர் தொடங்க 'இஞ்சார் தம்பு அதுதான் முழுக் காரணமுமில்லை. அதுகும் ஒரு காரணந்தான்.. ஆனால் பிரச்சனைக்குரிய சாமானுகள் ஊருக்கை தாராளமாய் உலவுகுதில்லோ? அததான் என்னண்டு எண்டிறதல்லே முழுக் காரணமாயிருக்குது?' எண்டு நான் சொல்ல முருகேசர் 'ம்ம்ம்... கதிரேசண்ணை கிட்ட வந்திட்டார்... உதைத்தானே இப்ப சொன்னனே பாக்க வேண்டினவை சரியில்லை எண்டு.. அதுதான்' எண்டார்.

'எனி சட்டத்தை வளைக்கிற விண்ணருகள் எங்களிட்டைக் கனபேர் இருக்கினமல்லே? இப்ப எத்தினை தரம் கசிப்போடை உவன் சீனாவும் அவன்ரை பெண்டிலும் பிடிபட்டவங்கள்.. ஒரு பத்து நாள் பதினைஞ்சு நாள் உள்ளுக்கை இருந்திருப்பினமோ?' எண்டார் வல்லியம்மான். பெருமையாயோ இல்லாட்டில் நக்கலாயோ எண்டது வெளிவராதமாதிரி. 'பிடிபடாயினம்... அப்பிடி அதிசயமாய்ப் பிடிபட்டாலும் வல்லியம்மான் சொன்னதுதான் நடக்கும்... உதுகள் அஞ்சுக்கும் பத்துக்கும் வழியில்லாததுகள்... அதுகளே இப்பிடியெண்டால் கோடியிலை மிதக்கிறவங்கள் தப்புறது கஸ்ரமோ?' எண்டு சிரிச்சார் முருகேசர்.

'உந்த கொண்டுவாறது, கை மாத்திறது அதுகளுக்குள்ளை பெரிய தலையளின்ரை செல்வாக்குகள் தாராளமாய் இருக்கெண்டு மல்லே இரகசியமாப் பறையினம்' எண்டு அங்காலை இஞ்சாலை பாத்தபடி மணியத்தார் மெல்லிய குரலிலை சொன்னார். 'எனி கட்டுப்படுத்துறது பரவலாச் செய்ய வேண்டின வேலையல்லே... அது சரியான கஸ்ரமுமல்லே.. வாறதையும் விக்கிறதையும் நிப்பாட்டிற வழியளைத்தான் யோசிக்க வேணும்...' எண்டார் கனகர்.

'உவங்களோ... செய்வங்களெண்டு நினைக்கிறியளோ? தங்கடை பிழைப்பிலை தாங்களே மண்ணள்ளிப் போடுவங்களோ?' எண்டுகொண்டு வல்லியம்மான் எழும்ப நானும் எழும்பி வீட்டை வந்திட்டன். மிச்சாக்கள் காரசாரமாய் கதைக்கிறது கேட்டுது.

மறந்தாலும், சில இடங்களில் முகத்தில் பயத்தையும், பதற்றத்தையும் உணர்வாக்கி வெளிப்படுத்துவதில் பிசிறடிக்கிறது. பாடகரான ஆத்தங்குடி இளையராஜாவுக்கு இது முதல் படம். நல்வருகை என்றாலும், கதைக்கு அவரது கதாபாத்திரம் பெரிய அளவில் தேவைப்படவில்லை.

நாயகி அனேகா இலங்கைச் சேர்ந்த அகதிப் பெண்ணாக காட்சிப்படுத்தபடுகிறார். டப்பிங்கிலும், இலங்கை மொழியை சரளமாக்குவதிலும் செயற்கைத்தனம் துருத்துகிறது. ஜோஜு ஜார்ஜ் அட்டகாசமாக வந்திறங்கி அதகளம் செய்கிறார். அவர் நடந்துவரும் காட்சிகளுக்கும் பின்னணி இசைக்குமான பிணைப்பு திரைக்கு அழககூட்டுகிறது. அவருக்கான கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்துகிறார். தமிழரசன், ஆடுகளம் நரேன், ஆடுகளம் ஜெயபாலன் உள்ளிட்டோரின் நடிப்பு கதைக்கு வலு சேர்க்கிறது.

கண்டுகொள்ளப்படாத நாடகக் கலைஞர்களின் வாழ்க்கையையும், அதையொட்டிய சிக்கல்களையும் கையிலெடுத்தது, இலங்கை அகதிகள் குறித்த பதிவு, புலம்பெயர் தமிழர்களின் நிலைகள் குறித்து பேச முயன்றிருக்கிறார் இயக்குநர் அசோக் வீரப்பன். அதை வரவேற்றாலும், அகதிகள் பிரச்சினை, அரசியல் போதைப்பொருள் கடத்தல் என படத்தில் பல்வேறு கூறுகளை நுழைத்து, தான் சொல்ல வந்த கருத்தில் இயக்குநர் தடுமாறியிருப்பதை உணரமுடிகிறது.

பல்வேறு கருத்தாக்கங்களை தொட முயலும் இப்படைப்பு ஆழமற்று, தெளிவற்று, மேலோட்டமாக நகர்வது பார்வையாளர்களுக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. கண்டதும் காதல் வகையறா பாணியை ஏற்றுகொண்டாலும், இரண்டு, மூன்று காட்சிகளில் மட்டுமே நாயகி சந்திக்கும் நாயகனுக்கு, உடனே ஒரு காதல் சோகப் பாடல் வைப்பதெல்லாம் கொஞ்சம் மிகைப்படுத்தல்தான்! கதையோட்டத்திற்கு தேவைப்படா காதல் திணிப்பு.


படத்தில் துண்டுத் துண்டாக 'கட்' ஆகும் காட்சிகள் ட்ரெய்லரை பார்ப்பது போன்ற உணர்வை கொடுத்து முழுமையை தவறவிடுகின்றன. முதல் பாதியில் பெரிய பிரச்சினையில் சிக்கி கொள்ளும் வைபவ், ஆத்தங்குடி இளையராஜாவிடம் பெயரளவுக்கு கூட பதற்றமில்லாமலிருப்பதால் திரையிலிருந்து பார்வையாளர்களை விலக்கிவிடுகிறது.

அதேபோல, அகதிகள் பிரச்சினை எடுத்துக் கொண்ட இயக்குநர் அதனை இன்னும் விரிவுபடுத்தியிருக்கலாம்' மேலோட்டமாக சொன்னதோடு, அவர்கள் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதாக காட்டியிருப்பது நெருடல். சந்தோஷ் நாராயண் பின்னணி இசையும், பாடல்களும் கதையோட்டத்திற்கு பலம் சேர்க்கின்றன. தினேஷ் புருஷோத்தமனின் ஒளிப்பதிவில் காரைக்குடி, ராமநாதபுரம், தூத்துக்குடியோடு இயைந்த கடலழகு கண்களுக்கு விருந்து.

சொல்ல நினைக்கும் கருத்தை அழுத்தமாகவும், ஆழமாகவும், சுவாரஸ்யமான திரைக்கதையுடன் தேவையற்ற காட்சிளை தவிர்த்துவிட்டு சொல்லியிருந்தால் பபூன் அழகாயிருக்கும்.

# பொன்னியின் செல்வன்

## எதிர்பார்ப்பின் பிரமாண்டத்தை பூர்த்திசெய்யாது




நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட காவியமான பொன்னியின் செல்வன் கதையின் திரைப்படம் முதலாவது பாகமாக வெளியாகி உள்ளது. இயக்குநர் மணிரத்தினம் உருவாக்கியிருக்கும் இந்தத் திரைப்படம் குறித்து முதலிலேயே கலவையான எதிர்பார்ப்பே இருந்தாலும், எழுத்தாளர் கல்கியின் அழியாக் காவியமான பொன்னியின் செல்வன் திரையில் எவ்வாறிருக்கும் என்கிற ஆர்வம் பலருக்கும் இருந்தது.

சோழ சாம்ராஜ்யத்தை சூழும் வஞ்சக இருள் விலகியதா, இல்லையா என்பதுதான் ‘பொன்னியின் செல்வன் பாகம் 1’ படத்தின் திரைக்கதை. சோழ நாட்டில் சதி நடப்பது ஆதித்த கரிகாலனுக்கு தெரியவர, தன் நண்பன் வந்தியத்தேவனிடம் அங்கு நடக்கும் விஷயங்களை தன் தந்தையிடமும், தமக்கை



யிடமும் சொல்லுமாறு ஏவுகிறான். ஆதித்த கரிகாலனின் ஆணையை ஏற்று சோழ நாடு செல்லும் வந்தியத்தேவன் அங்கு நடக்கும் சூழ்ச்சியை அறிந்து கொண்டு, அரசனிடமும், இளவரசி யிடமும் உண்மையைச் சொல்ல இறுதியில் எதிராளிகளின் சூழ்ச்சி கைகூடியதா, இல்லையா என்பதுடன் வந்தியத் தேவனின் பயணத்தில் நடக்கும் பிரச்சினைகளின் தொகுப்புதான் 'பொன்னியின் செல்வன் 1'.

பலரும் படமாக்க முயன்ற கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலை திரையாக்கம் செய்து காட்டியிருக்கிறார் இயக்குநர் மணிரத்னம். அந்த வகையில் அவரது முயற்சி பாராட்டுக்குரியது. அவருடன், இளங்கோ குமரவேலும், ஜெயமோகனும் இணைந்து திரைக்கதை எழுதியுள்ளனர். கல்கி தன்னுடைய கற்பனை வளத்தை எழுத்துகளில் நுழைத்து நாவலை படிக்கும் வாசகர்களின் மன ஓட்டத்தில் பிரமாண்ட காட்சிகளை அரங்கேற்றியிருப்பார். வந்தி யத்தேவனின் பாதைகளை அவர் விவரிக்கும் போது நாமும் வந்தியத் தேவனின் பின்னால் அமர்ந்து செல்லும் உணர்வை நாவல் கொடுக்கும். அப்படியான அந்த எழுத்துகளுக்கு திரைவடிவம் கொடுக்க தன்னால் முடிந்த அளவுக்கு முயன்றியிருக்கிறார் மணிரத்னம். அவை சில இடங்களில் கைகொடுத்தும், சில இடங்களில் இடறியுமிருக்கின்றன.

நாவலை வாசித்தவர்கள் கட்டமைத்திருக்கும் கற்பனை உலகை எட்ட நினைத்திருக்கும் இயக்குநர் மற்றும் படக்குழுவின் முயற்சி மெச்சத்தக்கது. ஆனால், வாசிக் காதவர்களுக்கு கதையும், மாந்தர்களும் புதிது எனும் போது, அவர்களுக்கான போதிய அறிமுகத்தைக் கொடுக் கத் திரைக்கதை தவறிவிட்டது. அதேபோல நாவலை அப்படியே படமாக் காமல், படத்தின் கால அளவிற்கேற்ப பல இடங்கள் கத்தரிக்கப்பட்டு சுருக்கப்பட்டுள்ளன.



படத்தின் பலமே அதன் தேர்ந்த நடிகர்கள் கூட்டம் தான். ஆதித்த கரிகாலனாக விக்ரம். நந்தினியை நினைத்து உருகும் காட்சிகளிலும், களத்தில் புழுதிபறக்க எதிரிகளை களமாடும் காட்சிகளிலும் ஆதித்த கரிகாலனுக்கான உருவமாக காட்சியளிக்கிறார். இடத்திற்கேற்ப தன்னை தகவமைத்து, சாமர்த்திய வீரனாக வந்தியத்தேவன் கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்துகிறார் கார்த்தி. ஆழ்வார்கடியானான ஜெயராமுடன் அவரது ஊடாட்டம் நன்றாகவே கைகொடுத்துள்ளது. அமைதியாய் செல்லும் காட்சிகளில் தன்னுடைய புலம்பல்களால் சிரிக்கவும் வைக்கிறார்.

இளமை தளும்பும், இளைய இளவ ரசனாக ஜெயம் ரவி ரசிக்க வைக்கிறார். ஐஸ்வர்யாராய், த்ரிஷா தெளிந்த நீரோ டையைப் போல திரைக்கு அழகூட்டி கல்கியின் வர்ணனைகளுக்கு நியாயம் சேர்க்கின்றனர். அதிலும் குறிப்பாக, இரண்டு பேரும் எதிரெதிராக சந்தித்துக் கொள்ளும் காட்சிகள் சிலிர்ப்பு.

ஐஸ்வர்யா லக்ஷ்மியின் பூங்குழலி நடுக்கடலில் கப்பலுக்குள் மிதக்கும் மீனாக ஈர உடையுடன் ஈர்க்கிறார். ஆழ்வார்க்கடி யான் நம்பி கதாபாத்திரத்திற்கு உயிர்கொடுத்திருக்கும் ஜெயராம் தலைமுடி ஸ்டைல், நடை, உடை, உடல்மொழி என மிரட்டலான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். தவிர பிரகாஷ்ராஜ், சரத்குமார், பார்த்திபன், பிரபு, ரஹ்மான், நிழல்கள் ரவி, விக்ரம் பிரபு, ஜெயராம், கிஷோர் தேர்ந்த நடிப்பில் கவனம் பெறுகின்றனர்.

'கருவூலத்தை பார்த்து மயங்கிட வேண் டாம்' என ஐஸ்வர்யாராய் சொல்லும்போது, 'வைர சுரங்கத்தையே பார்க்கிறேன்' என மறுமொழியுதிர்க்கும் வசனம் ஜெயமோகன் டச். ஆதித்த கரிகாலன் - நந்தினிக்கான குட்டி பின்னணிக் கதை ஈர்ப்பு. இரண்டாம் பாதியில் கப்பலில் நடக்கும் சண்டைக் காட்சிகள், தோட்டாதரணியின் கலை ஆக்கம் படத்தின் தரத்தை கூட்டுகின்றன. ரவி வர்மனின் ஒளிப்பதிவில் பிரமாண்ட காட்சி அனுபவம் கண்களுக்கு விருந்து. குறிப்பாக விக்ரம் ஐஸ்வர்யா ராய் குறித்து சிலாகிக்கும் காட்சிகளில் நிலையில்லாமல் முகத்துக்கேற்றபடி நகரும் கேமராவும் அது உருவாக்கும் அனுபவமும் புதுமை. ஆனால், போர் காட்சிகளில் பிரமாண்டமில்லாதது ஏமாற்றம்.

300 வீரர்கள், ட்ரோய் போன்ற பிரமாண்டமான ஆங் கில வரலாற்றுப் படங்களையும் பாகுபலி போன்ற புனைவு இந்தியப்

படங்களையும் பார்த்துப் பழகிப் போய்விட்ட திரை ரசிகர்களுக்கு அந்தப் பிரமாண்டங்களில் சிறிதள வைக்கூட பொன்னியின் செல்வன் தொட முயற்சிக்காதது பெரும் ஏமாற்றமே!

ஐஸ்வர்யாராய்க்கு, த்ரிஷாவுக்கான தனித்தனி பிரத்யேக பிண்ணனி இசையை கோர்த்ததன் வழியே அந்தக் கதாபாத்திரங் களுக்கான மூட்-ஐ உருவாக்கி கொடுத்துள்ளார் இசை யமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான். 'பொன்னிநதி', 'சோழா சோழா' இறு தியில் வரும் மனதை உருக்கும் பாடல் மற்றும் பின்னணி இசையில் படத்துக்கு ஆன்மாவை அச்சுபிசகாமல் பார்வையாளர்களுக்கு கடத்துகிறார்.

மொத்தத்தில் நிதானமாக நகரும் திரைக் கதை, சில இடங்களில் பிச கும் சிஜி, நாவல் வாசிக்காதவர்களுக் கான முழுமையில்லாத காட்சிகள் என சில குறைகள் இருந்தாலும், ரசிகர்களுக்கு காட்சி அனுபவவிருந்து படைக்கிறது பொன்னியின் செல்வன்.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781